திருக்கோயில்

ஜூலை 1993 விலை ரூ. 3



சேக்கிழார் திருஅவதாரம் புரிந்த குன்றத்தூரில் அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் விழா மிகச் சிறப்பாக 20-5-93 அன்று நடைபெற்றது. சேக்கிழார் சுவாமிகள் தாம் கட்டிய திருநாகேஸ்வரம் ஆலயத்திற்கு ஓதுவாமூர்த்திகளின் திருமுறைப் பாராயணத் துடன் எழுந்தருளும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆலய நிர்வாக அதிகாரி திரு என். கே. கே. இராமசாமி அவர்களும், கலைமாமணி தருமபுரம் சுவாமிநாதன், கலை மாமணி லால்குடி சுவாமிநாதன் உள்ளிட்ட ஓதுவாமூர்த்திகளும் சேக்கிழார் சுவாமிகளைத் திருநாகேஸ்வரத்திற்கு எழுந்தருளவைத்தனர்.

மூகப்பு:
சோளிங்கர் அருள்மிகு யோக ஆஞ்சநேயர்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு ஆடி | ஜூலை 1993 விலை ரூ. 3-00 | மணி: 7

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ.	18-00
ஓர் ஆண்டு	—	ரூ.	36-00
ஆயுள்	—	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் அனுபவம்
—திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

அறநிலையத் துறையின் ஒப்பற்ற சாதனைகள்
—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன்பால்ராஜ் அவர்கள்

மாலையில் ஒரு மலர்
—ஆர்.பி. சாரதி எம்.ஏ.பிஎட்.,

சுகம்தரும் சங்கரன்
—இசையடிப்பொடி

இந்தியமகளிர் பற்றிச் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள்—டாக்டர் தி. கமலி

உடம்பில் பஞ்சபூதம்
—அருள்திரு டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி

மயிலைப் பிள்ளையார் கோயில்கள்
—டாக்டர் சு. இராஜசேகரன்

ஆடல்காணீரோ, திருவிளையாடல் காணீரோ!
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

நம்நாட்டுச் சித்தர்கள்
—டாக்டர் இரா. மாணிக்க வாசகம்

கடனின்றி வாழ
—யோகிராஜ் வேதாத்திரி மகரிஷிகள்.

அருளாளர்களின் அருள் அனுபவம்

திருமந்திரச் செம்மல்

டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்.

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்

தலைமைச் செயலகம்

(24)

''சிவன் உறை சிந்தை''

சித்தம் சிவன்பால் உறைவதும் சிவம் சித்தத்தை விழுங்குவதும் யோகம் எனப்படும். யோகம் எனும் சொல் ஒரு வடமொழிச் சொல். அதற்கு இணைதல், சேருதல் என்று பொருள். பல ஆயிரம் ஆண்டுகளாக நமது ஞானிகளும், அருளாளர்களும் யோக மார்க்கத்தில் உண்மைகளைக் கண்டறிந்து தங்களுடைய அனுபவங்களைக் உலகஆன்மிக வாழ்க்கைக்கு ஒப்பற்ற பரிசாக வழங்கியுள்ளனர். யோகம் ஓர் சிறந்த அருள் நிலை ஆகும். அருள் நிலை என்பது ''சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற'' நிலையாகும். சிவப்பரம்பொருள் சிந்தையுள்ளே நின்ற நிலையை உணர்ந்து, அகமகிழ்ந்து பேரானந்தத்தில் திளைத்து நிற்கும் நிலையே யோக நிலையாகும். இதுவே சிவயோகம் எனப்படும். சுந்தரமூர்த்தி நாயனார் தில்லையில் இறைவனை தரிசித்த பொழுது பெற்ற பேரின்பத்தைப்பேரின்ப வெள்ளம் என்றும், மாறிலா மகிழ்ச்சி என்றும் சேக்கிழார் பெருமான் விவரித்து மகிழ்கின்றார். வன்தொண்டர் தில்லையில் நடராஜப்பெருமானின் பெரும் கூத்தினைக்காண்கின்றார். அதாவது அந்த நிலையில் அவருடைய பொறிகள் அனைத்தும் கண்ணாகிய ஒரு பொறி வழியே மட்டும் செயல்படுகின்றன. அவருடைய உணர்வுகளெல்லாம் ஒருமுகப்படுத்தப்பட்டன. அவருடைய அந்தக்கரணங்களைப் பொருத்தவரை தனித்தனியே செயல்படாத அவருடைய சிந்தை வழியே செயல்பட்டன. இறைவனின் திருக்கூத்து அவருடைய சிந்தையை நிரப்பி நின்றது. அவருடைய குணங்களைப் பொறுத்தவரை எல்லாக் குணங்களும் சாத்துவிகத்துள் அடங்கி நின்றன. ஆகவே, பிறப்பினைச் சேர்க்கும் எல்லாக் கருவிகளும் சிவன்பால் நின்று, தங்களுடைய இயல்பான போக்கினை அடக்கிக் கொண்டு, சிவத்தின்பால் அமைந்திருந்தன. கருவிகள் தங்கள் இயல்புப்படி தத்தம் வழியே செல்லும் நிலை இங்கு இல்லை. 'தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்'' என்பார் திருமூலர்.

'மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழி அடைத்த அமுதே
ஊறி நின்று என்னுள் எழும் பரஞ்சோதி.....',

என்னும் திருவாசகப் பாடலும் இந்தப் பொருளையே உணர்த்துகின்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் பெற்ற சிவானந்த அனுபவம் சிவ யோகத்தின் முடிவு என்றும், எல்லை என்றும் கருதலாம். இதைப் பற்றி தத்துவங்கள் பல பேசலாம். விளக்கங்கள் கொடுக்கலாம். நூல்கள் பல எழுதலாம். ஆனால், சிவயோக நிலை ஓர் அனுபவ நிலை. சொற்களுக்கு அப்பாற்பட்டது. இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றே. சாதாரணமாக உடலோடு சேர்ந்து இயங்கும் புறக்கருவிகளும், அகக்கருவிகளும் புறத்தோற்

றத்தை நாடி செயல்படுகின்றன. அவ்வாறு செயல்படும் வரை அவை உயிரின் உண்மை நிலையை அறிந்து கொள்ள தகுதியற்ற நிலையில் உள்ளன. திருவருளால் இதிலே ஒரு மாற்றம் ஏற்படுகிறது. கருவி, கரணங்கள் தத்தம் தொழிலிலே தொடர்ந்து ஈடுபடுகின்றன. ஆனாலும், உள்ளுணர்வு சிவானுபவத்தில் திளைக்கத் தொடங்குகின்றது. இந்த ஒரு மகத்தான மாற்றம் என்றாவது ஒரு நாள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நடந்தே தீரும். இறைவன் நமக்கு அருளிச் செய்துள்ள சுதந்திரத்தை, உரிமையை, ஆற்றலை, அறிவைப் பயன்படுத்தி சிவானுபவத்தை அடைவதற்கான வழிகளிலே ஈடுபடுவதே நமது தலையாய குறிக்கோளாகும்.

இந்தக் குறிக்கோள் நம்முடைய கண்களுக்குத் தென்படுவதில்லை. ஆணவம் நமது கண்களை மறைக்கின்றது.. ஒரு வகை இருள் நிலையிலேயே வாழ்ந்து வருகிறோம். எப்பொழுதும் நமது உயிருடன் சேர்ந்து கிடக்கும் ஆணவமலம் உயிரை அதன்உண்மைநிலையைத் தெரிந்து கொள்ளாவண்ணம் மறைத்தலாகிய தொழிலைச் செய்கிறது. ஆகவே, உயிருக்கு தான் யார், தனது இருப்பிடம் எது, தனது நோக்கம் என்ன என்ற ஒரு அறியாத நிலையே படர்ந்து கிடக்கின்றது. உயிர் என்று ஒன்றுண்டு. இறைவன் தனது பெருங் கருணையால் உயிரானது அருள் நிலையைப் பெற வேண்டுவதன் பொருட்டு, அதற்கு உடலையும் கருவிகளையும் வழங்குகின்றான். (வினைக் கீடாய் மெய்கண்டு- திருமந்திரம்).

உயிர் ஆணவ மல மறைப்பிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள வேண்டும். இதற்காகவே இறைவன் அருளால் பொறி, புலன்கள் உயிருக்கு அளிக்கப்படுகின்றன. உயிரானது சகல நிலையைப் பெறுகிறது. இது புணர்ச்சிக்கு ஏதுவானநிலை. உயிருக்கு அறிவு உண்டு. ஆனால், இது முழுமையான அறிவன்று. இறைனுக்கு மட்டுமே பேரறிவும், பேராற்றலும் உண்டு. வெறும் சுற்றுணர்வும், சிற்றுணர்வும் மட்டுமே உயிர் பெற்றுள்ளது. அந்த அறிவும் உடலுடன் கூடிய பொறி, புலன்கள் செலுத்தும் வழியிலேயே செல்கின்றது. அதனால், வினை வளருகிறது. வினை வளர்ந்தாலும் உயிருக்கு சற்று விளக்கம் கிடைக்கின்றது. உயிர் இப்பொழுது தனது கருவிகளைச் சார்ந்து நிற்கின்றது. உயிருடைய அறிவானதுகருவிகள் மூலமாக கிடைக்கும் புறத்தேயுள்ள அனுபவங்களை மட்டுமே பெறுகின்றது. இதனால் உயிரானது தன்னிலை உணராது தான் உடலென்றே, உடலைச் சார்ந்த கருவிகள் என்றே கருதிக் கொள்ளுகின்றது. இருந்தாலும், இந்தக் கருவிகள் தேவைப்படுகின்றன. தத்துவங்கள் தேவைப்படுகின்றன. அவற்றின் வழியாகவே சிறிது சிறிதாக உயிருக்கு தனது அறிவு, ஆற்றல் ஆகியவற்றின் விளக்கம் கிடைக்கின்றது. திருவருள் சேர்க்கையால் தத்துவங்கள் யாவும் நம்முடைய வளர்ச்சிக்கு பயன்பட்டு நல்லுணர்வையும், நல் விருப்பத்தையும், நற்செயலையும், நல்ல பண்பாட்டையும் வழங்குவதற்கு ஆதாரமாகவும் உள்ளன.

உலகில் தோன்றிய ஒவ்வொருவரும் தமது கருமங்களை முடிக்க வேண்டும். அதற்கு மாயையின் சேர்க்கை தேவை. மாயையாலே மாயையை வெல்ல வேண்டும். மாயையை வெல்வது என்றால், உயிரானது தன்னிலை விளக்கம் பெற வேண்டும். தான் உடம்பல்ல, உடம்பின் கருவிகள் அல்ல என்று தெரிந்து கொள்ள வேண்டும். உயிரற்ற உடம்பு ஏதும் செய்யலாகாது. உயிரோடு கூடிய உடம்பு தான் உயிரின் அறிவு, ஆற்றல் ஆகியவற்றால் செயல்படுகிறது. உயிரில்லாவிடில் உடலும், கருவிகளும் வெறும் சடமே. இவ்வுயிரானது உடம்புக்கு வெளியே இருப்பதன்று. அகத்தே இருப்பது என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். இதையே திருமூலர் 'உடலோடு உயிரை ஒருபொழுது உன்னார்' என்றார்.

உயிர் எப்பொழுதும் ஒன்றைச் சார்ந்தே நிற்பது. அறிவு குன்றிய நிலையில் புறத்தேயுள்ள பொருள்களைச் சார்ந்து நிற்கின்றது. இன்பம் அடைகின்றது. துன்பமும் அடைகின்றது. உயிரின் அனுபவங்கள் உடலுடைய அனுபவங்களாக தவறாகக் கருதப்படுகின்றன. உண்மையில் இவையெல்லாம் உயிரின் அனுபவங்களே. இவ்வாறு உயிருக்கு இந்த அனுபவங்களைச் சேர்க்கின்றவன் வேறொருவன். உடம்பு சடப்பொருள். உடம்பினால் மட்டும் அனுபவம் கிடைக்காது. உயிர் சத்துப்பொருள். அறியும் தன்மையுடையது. ஆனால், உயிரின் அறிவு வியாபகமுடையது அன்று. இதன் விளைவாக உயிர் தன்னை உடலுடன் சேர்த்து தனது இயக்கத்திற்கு காரணமாக உள்ள இறைவனுடன் தனக்குள்ள தொடர்பினை அறிந்து கொள்ளாமல் உலக அனுபவங்களுக்குத் தன்னை அடிமையாக்கி அறியாமையில் கிடக்கின்றது. உயிரின் அறிவுக்குள் அறிவாய் அமர்ந்து, உயிரினை அதனுடைய விருப்பம்போலே நடத்தி, பல அனுபவங்களுக்கு உயிரை உள்ளாக்கி, முடிவில் உண்மை உணர்வு பெறச் செய்கின்ற பேரறிவுப் பொருளாகிய பரம்பொருள் ஒன்று உண்டு. அந்தப் பொருள் எங்கும் நிறைந்துள்ளது. அந்தப் பொருளே உடலுக்குள், உயிருக்குள் அந்தர்யாமியாக விளங்குகின்றது. அந்தப் பொருளே உயிரை நடத்திச் செல்லுகின்றது. இதுவே சிவம் எனப்படுவதாகும். இந்தச் சிவமானது உயிருக்கு ஒன்றாய், வேறாய், உடனாகவும் செயல்பட்டு வருகின்றது. இதை நாம் அறிவதில்லை. 'உயிருள் சிவனை ஒரு பொழுதும் உன்னார்' என்றார் திருமூலர்.

உயிர் உடலுக்கு மாறுபட்டது என்று உணர்வது முதல் கட்டம். உயிருக்கு உயிராக நிற்பது பேரறிவாகிய சிவப் பரம்பொருள் என்று எண்ணிக் கொள்வது இரண்டாவது கட்டம். சிவப்பொருள் நமது சிந்தனைக்குள் வீற்றிருக்கின்றான். ஊனாகி, உயிராகி நிற்கின்றான். 'நினைப்பவர்கள் மனம்தன்னுள் நினைவேதானாய் நிற்கின்றான்'' நமது கருவி, கரணங்களை இயக்குவிக்கும் ஆற்றலை உயிருக்குக் கொடுக்கின்றான். கரணமெல்லாம் நீ என்று அருளாளர்கள் கூறுகின்றனர். உண்மையில் நான் என்றும், எனது என்றும் ஒன்றுமில்லை. எல்லாம் அவன் தன் விருப்பம்

அன்றே. சிந்தையிலே வீற்றிருக்கும் பேரறிவுப் பொருள் அவன். மனம் போன போக்கே சிந்தை செயல்படாது. தன்னுள் அறிவுக்கு அறிவாய் வீற்றிருக்கும் பரம்பொருளை உணர்ந்து கொள்வது மூன்றாவது கட்டம். தான் உடலில்லை என்றும், அறிவுப் பொருள் என்றும், பேரறிவாகிய இறைவனால் இயக்கப்படுபவன் என்றும் நினைந்து, சிந்தையிலே தெளிவுபடுவது உயிர்களின் கடமையாகும். இதை அறியாத நிலையில் 'ஒரு பொழுது உன்னார் சிவன் உறைச் சிந்தையை' என்கிறார் திருமூலர். நற்கதி பெறுவதற்கு தனக்கு நிலைத்த ஆதாரம் கடவுள்தான் என்கிற நினைப்பு வர வேண்டும். தன்னுள் வீற்றிருக்கும் சிவத்தைவிட்டு உயிரானது தனித்து நிற்க முடியாது என்கிற உறுதியும் எழ வேண்டும். இந்த உறுதியில் சிறிதளவும் தளர்வு கூடாது. திருவடி ஞானமே நாம் பெறத்தக்க ஒன்று என்று அதைப் பெறும் முழு முயற்சியிலேயே தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். தன்னைத்தான் உணர்ந்து கொள்வது அறிவு நிலையில் ஒரு முன்னேற்றம்தான். ஆனால், அத்துடன் நின்றுவிடக் கூடாது. அதையும் கடக்க வேண்டும். எல்லாம் திருவருட் செயல் என்று எண்ணி நின்றிடல் வேண்டும். அருளைப் பற்ற வேண்டும். அருளிலே அழுந்திவிட வேண்டும். ஊஞ்சல் விட்டத்தை சங்கிலியால் பற்றியுள்ளது. ஊஞ்சல் ஆடுகின்றோம். கயிறு அறுந்தால் ஊஞ்சல் தரையில் விழுந்து விடுகிறது. முதலில் ஊஞ்சல் சங்கிலியால் விட்டத்தைப் பற்றியிருந்தது. இப்பொழுது நிலையாக தரையில் அமர்ந்துவிடுகின்றது. ஆட்டமும் ஓய்ந்து விடுகின்றது. கருவி கரணங்களைச் சார்ந்து உயிரானது உலக மேடையில் நடை போடுகின்றது. கருவி கரணங்கள் புறப் பற்றினை நீக்கி இறை நாட்டம் செலுத்தும்பொழுது சிவமாகிய பரம் பொருள் உயிருக்கு ஆதாரமாகிவிடுகின்றது. இதை திருவுந்தியார் 'நம் செயலற்று இந்த நாம் அற்ற பின் நாதன் செயல் தானே' என்கிறது. இவ்வாறு உயிரின் சிற்சக்தியை, சிற்றறிவை இறையருட் சக்தியுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். இதுவே யோகம் எனப்படும். இயல்பாக பாசத்தை வளர்க்கும் கருவி, கரணங்களின் இயக்கம் உடலின் கீழ்ப் பகுதியில் அறிவையும், ஆற்றலையும், திருப்புகிறது. இதைச் செய்யாமல் கருவிகளின் இயக்கம் உயிரின் இயல்பை மேல்நிலைக்கு எடுத்துச் செல்வது யோகமாகும். இதை யோக நூல்கள் பலவாறாக விளக்குகின்றன. மூலாதாரத்திலே அடங்கிக் கிடக்கும் உயிரின் சிற்சக்தி தியான சாதனை அடிப்படையில் மேலெழும்பி அருட் சக்தியோடு கலக்கச் செய்வது யோகமாகும். இதனை அறிந்து முயற்சிகளை மேற்கொள்ளுதல் நான்காம் கட்டமாகும். இதனை 'ஒரு பொழுது உன்னார் சந்திரப் பூவையே' என்றார் திருமூலர்.. தியான சாதனையின் நான்கு கட்டங்களையும் தெளிவாக விளக்கி விடுகின்றது பின்வரும் திருமந்திரம்:

'ஒருபொழு(து) உன்னார் உடலோ(டு) உயிரை;
ஒருபொழு(து) உன்னார் உயிருள் சிவனை;
ஒருபொழு(து) உன்னார் சிவன்உறை சிந்தையை
ஒருபொழுது உன்னார் சந்திரப் பூவையே'

(திருமந்திரம்.....601)

ஆகவே, உண்மை யோகம் நன்குணர்ந்த உயிரானது சிவானுபவத்தில் திளைத்து நிற்பதே ஆகும். மனம் செல்லும் போக்கே போகாது மனதை அடக்கப் பயில வேண்டும். மனம் புறத்தே போகாது அடங்கி, ஒரு குறியில் நின்று சிவத்தின் தோற்றத்தையும் சிந்திக்க வேண்டும். அந்தச் சிந்தனை இடைவிடாமல் இருக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பழைய வினைகளின் வலிமை காரணமாக மனம் அவ்வப்பொழுது செம்பொருளைப் பற்றிய சீரிய சிந்தனையிலிருந்து விலகி, உலகத்தின் மீது தனது நாட்டத்தைச் செலுத்தும், அவ்வாறு இல்லாமல் அதற்குத் தடை போட வேண்டும். மேலும் மேலும் தியான மூர்த்தியின் பால் மனதைச் செலுத்தமுயல வேண்டும். இது நினைத்தமாத்திரத்திலேயே நடந்து விடாது. திருவருளே மனதிற்கு பக்குவத்தையும், வலிமையையும் கொடுக்கும். உலகப் பொருட்களின் மீது பற்றினைப் படிப்படியாகக் குறைத்து, அவற்றின் மீது சாராமல் தியான மூர்த்தியின் மீது சார்ந்து திருவுருவ தியானத்தில் நிற்பது ஒரு படியாகும். கடவுளை உணரவொட்டாமல் தடுக்கும் கலைகள் தியானத்திற்கு ஊறு விளைவிக்கும். ஆனால், அதற்காகத் தளராமல் ஒரே குறிப்பாக நிற்க வேண்டும். திருவடி ஞானத்தையே தலையாய கோட்பாடாக உள்ளத்தில் வைத்து இடைவிடாமல் நிற்கும் பொழுது கருவி, கரணங்கள் உலகப் பற்றினை நீக்கிக் கொண்டு தியான மூர்த்தியின் திருவுருவில் அழுந்தும் என்று அருளாளர்கள் கூறுகின்றார்கள். இயமம் முதல் எல்லாவித வாழ்க்கைக் கோட்பாடுகளையும் அனுசரிக்க வேண்டும். தொடர்ந்து சிவப் பரம் பொருள் மீது அசையாத, மாறாத பற்றினைக் கொள்ளும்பொழுது உயிர் சமாதி நிலைக்குச் செல்லுகின்றது. பல தடைகளைத் தாக்கிஎறிந்து தொடர்ந்து உயிரானது பரம்பொருளை நாடும் நிலை ஆதார யோகம் என்று கூறப்படுகின்றது.

''சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்
என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்-சார்பு
கெடஒழுகின் நல்ல சமாதியுமாம் சேதப்
படவருவ தில்லைவினைப் பற்று''

(திருக்களிற்றுப்படியார்....34)

ஆதார யோகமாவது சிறு குழந்தையின் தாயார் குழந்தையின் கையைத் தூக்கி அந்தக் கையாலேயே வானத்தில் உள்ள சந்திரனைக் காட்டுவது போலாகும். கண்ணிற்கு உடனடியாகப் படாத ஒரு நட்சத்திரத்தை கிட்டத்தே தெரியும் மரக்கிளை ஒன்றைக் காட்டி அதன் வழியே தெரிவிப்பது போலாகும். ஆதார யோகத்தில் உயிரின் அறிவு பயன்படுகின்றது. அது முன்னிற்கின்றது. ஆனால், அந்த உயிரை பற்றிய நினைப்பும் நீங்க வேண்டும். சிவத்தைப் பற்றிய எண்ணம் உயிருக்குள் நிரம்பி நிற்க வேண்டும். எங்கும் வியாபகமாய் உள்ள சிவத்தினுள் உயிர் அடங்கி நிற்க வேண்டும். உயிரை ஆதாரமாகக் கொள்ளாமல், அல்லது உயிரினுடைய நினைப்பை ஸ்திரப்படுத்தும் தியான மூர்த்தியின் ஆதாரமில்லாமல் சிவமாகிய பரம் பொருளைக் கொண்டு, ஆதாரமாக வைத்து, அந்த அறிவிலே தான் மறைந்து விடுவது நிராதார யோகமாகும். (தொடரும்)

அறநிலையத் துறையின் ஒப்பற்ற சாதனைகள்



மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்
திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள்

சாதனைச் சரித்திரம் படைத்து வரும்
மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அரசு பொறுப்பேற்ற இரண்டாண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் பலப்பல.

தேர்தலில் அளித்த வாக்குறுதிகளின்படி தமிழ்நாடு திருக்கோயில்களின் நிர்வாக மேம்பாட்டைக் கருதி திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது. மேற்படி நிர்வாக வாரியத்தால், 19 மாவட்டங்களிலும், மாவட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

20 ஆண்டுகளுக்கு முன்பாக களவுபோன புகழ் பெற்ற, புத்தூர் அருள்மிகு நடராசர் திருவுருவச் சிலை தமிழ்நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டது. மேற்படி திருக்கோயிலை ரூ. 7 இலட்சம் செலவில் புதுப்பித்து குடமுழுக்கு விழா நடத்த ஏற்பாடுகள் மற்றும் நித்திய பூசை நடத்த ரூ. 1.60 இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தி அதன் வட்டியினைக் கொண்டு நித்ய பூசைகள் செய்யும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ரூ.9 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 5 இலட்சம் செலவில் ஜெனரேட்டர் ஒன்றும் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

திருக்கோயில் பணியாளர்களின் குடும்ப நல நிதி உதவி ரூ. 10,000 என இருந்ததை ரூ. 20,000 ஆக உயர்த்தி வழங்கவும். அதன் பின்னர் ரூ. 20,000-லிருந்து ரூ. 30,000 ஆக உயர்த்தி வழங்கவும் ஆணையிடப்பட்டது. இந்த அரசுப் பொறுப்பேற்றபின், 125 குடும்பங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

பல திருக்கோயில்களில், பணியாளர்களுக்குச் சம்பளம்கூட கொடுக்க வசதியில்லாமல், இருப்பதைத் தொடர்ந்து மேற்படி பணியாளர்களுக்குச் சம்பளப் பாக்கிகளைக் கொடுக்க ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. மேற்படி நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து கடந்த 2 ஆண்டுகளில், திருக்கோயில் பணியாளர்



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் ஆக
திருமிகு வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் பதவி ஏற்கின்றார்கள்.

களின் சம்பளப் பாக்கி வழங்கும் திட்டத்தின் கீழ், 2,533 பணியாளர்களுக்கு 34.66 இலட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் முதன் முறையாக வேத ஆகமங்களைக் கற்றுச் சிறப்புறும் பொருட்டு வேத ஆகமக் கல்லூரி நிறுவிட அறிவிக்கப் பட்டது. அர்ச்சகர்களுக்கு, புத்தொளிப் பயிற்சித் திட்டம் அறிவிக்கப்பட்டது. உபரி நிதி உள்ள திருக்கோயில்களிலிருந்து. நிதி மாற்றம் செய்து ரூ. 8 இலட்சம் நிதி ஏற் படுத்தி, மாநிலத்தில் 10 இடங்களில் அர்ச்சகர் களுக்குப் புத்தொளி பயிற்சித் திட்டம் வழங் கும் திட்டம் நடைபெற்று வருகிறது. இத் திட்டத்தில் 346 அர்ச்சகர்கள் பயன் பெற் றுள்ளனர்.

ஓதுவார்களுக்கு ஏற்கெனவே, வழங்கி வரப்படும் ஓய்வூதியத்தினை 250-லிருந்து ரூ. 300 ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிக்கப் பட்டது.

வேத பாராய்ணம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பாடுவோர் மற்றும் அரையர்சேவை செய்வோர்களுக்கு 100 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டம் உத்தரவிடப்பட்டு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தகுதிவாய்ந்த 500 அர்ச்சகர் களுக்கு ஓய்வூதியத் திட்டம் மாத ஓய்வூதியம் ரூ. 300 என்று வழங்க அரசாணைப்படி உத் தரவு வழங்கப்பட்டு ஓய்வூதியம் வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி தேவஸ்தானம் போர்டுக்கு ஆண்டுதோறும் ரூ. 13.60 இலட்சம் அரசு மானியம் வழங்கப்பட்டு வந்தது. நிதிப்பற் றாக்குறை காரணமாக, இந்த மானியத்தை உயர்த்த வேண்டும் எனக் கேட்கப்பட்டதன் அடிப்படையில், முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. ஒரு கோடி முதலீடு செய்து, அதன் வட்டி யிலிருந்து ஆண்டுக்கு ரூ. 10 இலட்சம் மேற் படி போர்டுக்கு வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், ஆண்டுதோறும் கூடுதலாக ரூ. 4 இலட்சம் ஆகக் கூடுதல் ரூ. 14 இலட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு காலப் பூசை நடைபெறவும் வசதி யில்லாத திருக்கோயில்களில், ஒரு காலப் பூசை நடைபெற நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட் டத்தின்படி, திருக்கோயில் சார்பில் ரூ. 6.250 நிதி திரட்டப்பட்டதால் பாக்கி ரூ. 18,750 முதல்வர் திருக்கோயில் பாதுகாப்பு நிவாரண நிதியிலிருந்து அளித்து, மொத்தம் ரூ. 25,000 நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்படும் என்று திட்டம் மாற்றி அமைக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட உள்ளது.

திருக்கோயில்களில் நடைபெறும் திருட்டு மற்றும் சிலைஉடைப்பைத் தடுக்கும் பொருட்டு 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினர் கொண்ட ஒரு திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற் படுத்தப்பட்டது. இப்படையில் இதுவரையில்

2,016 திருக்கோயில்களில் காவலர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டு, திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால் 337 திருக்கோயில்களில் எச்சரிக்கை மணி பொருத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்சி ஏற்பட்டபின், திருக்கோயில்களுக்கு வரவேண்டிய குத்தகைப் பாக்கிகளை வசூலிக்க வருவாய் நீதிமன்றங்களில் 10,927 வழக்குகள் ரூ. 765 இலட்சங்களுக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 2119 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ. 2.5 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, 5 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்தது. 1992-93-இல் மேலும் ஆறு வருவாய் நீதிமன்றங்கள் அமைக்க இந்த அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது 11 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் உள்ளன.

தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால் 291 திருக்கோயில்களுக்கு ரூ. 48.86 கோடி மதிப்பிற்கு வரவு-செலவுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால், திருக்கோயில்களில் உள்ள, தணிக்கை ஆட்சேபனைகளில் 770 பத்திகள் சம்பந்தப்பட்ட ஆட்சேபனைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ரூ 7 கோடி திட்டத்தின்கீழ், ஒரு காலப் பூசைக்காகத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. 2500 வழங்கப்பட்டு வந்ததை ரூ. 3,500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

திருக்கோயில்களில் நடைபெறும் இலவசத் திருமணங்களுக்குச் செலவிடப்பட்டு வந்த ரூ. 1,250-ஐ ரூ. 1,500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்திற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார். சிவகங்கை மற்றும் வேலூர் ஆகிய இரண்டு கோட்டங்களில் இரண்டு துணை ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டு உதவி ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. தலைமையிடத்தில் வழக்குகளைக் கவனிக்க உதவி ஆணையர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் 203 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர். மாவட்டக் குழுக்களால் 2,632 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர். சமயபுரம் மற்றும் திருவேற்காடு திருக்கோயில்கள் துணை ஆணையர் நிலையிலிருந்து, இணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டன. அதேபோல் கள்ளழகர் திருக்கோயில் உதவி ஆணையர் நிலையிலிருந்து துணைஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் ரூ. 5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து வசதி இல்லாத திருக்கோயில்களின் ஒரு காலப் பூஜை நடைபெற 1991-92-இல் 547 திருக்கோயில்களுக்கு ரூ. 13.67 இலட்சமும், 1992-93-ஆம் ஆண்டில் 265 திருக்கோயில்களுக்கு ரூ. 9.27 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கான ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. 25,000 விதம் 1991-92-ஆம் ஆண்டில் 66 திருக்கோயில்களுக்கு ரூ. 16.50 இலட்சமும் 1992-92-ஆம் ஆண்டில் 95 திருக்கோயில்களுக்கு ரூ. 23.15 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆலயங்களின் திருப்பணி மற்றும் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ரூ. 45 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 1991-ஆம் ஆண்டில், 1991-92-க்கு, கும்பகோணத்தில், நடைபெற்ற மகாமகத் திருவிழா 8 ஆலயங்களின் திருப்பணிக்காக ரூ. 12.50 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டது. மேலும், காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், இராஜகோபுரத் திருப்பணிக்காக ரூ. 11 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மொத்தத்தில் ரூ. 72.50 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் எப்போதுமே இந்த அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. 1991-ஆம் ஆண்டில் பொது நல நிதியிலிருந்து திருக்கோயில் திருப்பணிக்காக ரூ. 17.01 இலட்சம் வழங்கப்பட்

டுள்ளது. 1992-ஆம் ஆண்டில் 34 திருக்கோயில்களில் திருப்பணிக்காக ரூ.19.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

முதன் முதலாகத் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்ட பிறகும், அதற்கு முன்பாகவும், 1991-ஆம் ஆண்டில் 611 திருக்கோயில் திருப்பணி வேலைகள் ரூ. 10.35 கோடியில் நடைபெற்று வந்துள்ளது. 1992-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகள், திருப்பணிகள், 257, மதிப்பீட்டுத் தொகை ரூ.190.74 இலட்சம். கட்டுமானப் பணிகள் 110 மதிப்பீடுத் தொகை ரூ. 226.83 இலட்சம் மேலும் 103 வேலைகளுக்கு ரூ. 3.82 கோடிக்கு அங்கீகரிக்கப்பட்டதில், 44 பணிகள் ரூ. 220.96 இலட்சத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில் நடைபெற்று முடிந்துள்ள மகாமகத் திருவிழாவினை ஒட்டி, 19 திருக்கோயில்களில், 11 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டு குட முழுக்கு விழா நடைபெற்றுள்ளது. அதற்காக அரசு மானியமாக ரூ. 12.50 இலட்சமும், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 10 இலட்சமும், திருக்கோயில்கள் உபரிநிதியிலிருந்து ரூ. 12 இலட்சமும், முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 5.77 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடப்பெற்ற 19 சைவத் திருக்கோயில்களுக்கும், 16 வைணவத் திருக்கோயில்களுக்கும் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 1988-ஆம் ஆண்டிலிருந்து போதிய நீர் இன்மையால், நடத்த இயலாமலிருந்த தெப்பத் திருவிழாவினை நடத்துவதற்கு இந்த அரசு திட்டம் தீட்டி, ரூ. 35 இலட்சம் செலவில் திருக்குளத் திருப்பணி வேலைகள் செய்து, குளத்திற்குள் தண்ணீர் தேக்கி 1992-ஆம் ஆண்டில் தெப்பத் திருவிழா நடத்தப்பட்டுள்ளது.

உத்தரகோசமங்கை, அருள்மிகு மங்களநாத சுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது, திருப்புடைமருதூர், அருள்மிகு நாரம்புநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக பொதுநல நிதி மற்றும் ரூ. 5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்தும் ரூ. 7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மதுராந்தகம் அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில், திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

கும்பகோணம் நாதன்கோவில், அருள்மிகு ஜகந்நாதப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் அருள்மிகு அவிநாசி லிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய தேர் செய்து முடிக்கப்பட்டு தேர்த்திருவிழா நடைபெற்றது. இத்தேர்த் திருப்பணிக்காக ரூ. 5 கோடிவைப்பு நிதி வட்டியிலிருந்து ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், கீழ்நிலக்கோட்டை, அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலுக்கு ரூ. 4 இலட்சத்திற்கு உபயமாகத் தேர் செய்து முடிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் வட்டம், இளையனார் வேலூர் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய தேர் ரூ. 4.15 இலட்சத்தில் செய்யப்பட உள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் மாவட்டம். சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த எழுவங்கோட்டை அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி ரூ. 7.40 இலட்சத்தில் நடைபெற்று வருகிறது.

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வர் திருக்கோயில் சங்குதீர்த்த குளம் தெப்பத்

(இதன் தொடர்ச்சி 25-ஆம் பக்கத்தில்)

மாலையில் ஒரு மலர்

ஆர். பி. சாரதி, எம்.ஏ.பி.எட்.,

மூவர் பாடிய இன்னிசைத்துதிப்பாடல்களின் தொகுப்பு தேன் மலர் மாலை என்ற பொருளில் 'தேவாரம்' என்றே அழைக்கப்படுகிறது. அதுபோல் ஆழ்வார்களின் அமுதத் தமிழிசைப் பாசுரங்கள் அருளிச்செயல்கள் என்றும் 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்றும் குறிப்பிடப் படுகிறது.

எனினும் ஆழ்வார்கள் தம் பாடலை இன்னிசைத் தமிழ்மாலை, நன் மாலை, சொன் மாலை,ஒலி மாலை, சங்கத் தமிழ் மாலை என்றெல்லாம் மேலும் குறித்து மகிழ்ந்தனர்.

திருமாலுக்குப் பூமாலையும், பாமாலையும் சாற்றி மகிழ்ந்தவர்கள் கோதை,பெரியாழ்வார், தொண்டரடிப் பொடி ஆழ்வார் என்ற மூவராவார். அவருள்ளும்தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியருளிய 'திருமாலை' தனிச் சிறப்புடையது. 'திருமாலை அறியார் பெருமாளை அறியார்' என்று போற்றப்படும் அளவுக்குச் செறிவு வாய்ந்தது.

'திருமாலை' அருளிய தொண்டரடிப் பொடியாழ்வார் பிறந்த திருநாளையே மாமுனிகள் 'மன்னிய சீர் மார்கழியில்கேட்டை' என்று போற்றுகிறார். மார்கழி மாதம் நிலை பெற்ற பெருமை வாய்ந்தது.

'மாதத்தில் மார்கழி நான்' என்றல்லவா கீதை நாயகன் மொழிந்தான்!

'மா' என்ற ஓரெழுத்தே திருமகளைக் குறிப்பதல்லவா!

கேட்டை என்பதை வடமொழியில் 'ஜேஷ்டா' என்று 'மூத்த' 'உயர்ந்த' என்ற பொருளில் அல்லவா குறிப்பர்!

தொண்டரடிப்பொடியார் பிறந்த நாளும் கோளும் மட்டுமல்ல பெருமை வாய்ந்தது- அவர் ஈரத்தமிழ்ச் சொல்லும் இனிமை வாய்ந்தது. நாற்பத்தைந்து மலர்கள் கொண்ட திருமாலையின் ஒரு மலரின் மணத்தை, எழிலை ஒளியைக் காண்போமா?

நாற்பத்தைந்து பாடலுள் நடுவுண் இருபத்து மூன்றாவது மலர்க்குஞ்சலமாகத் தொங்கும் நயமான பாடல் இது.

''கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டு
பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழில்
அரங்கந்தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர்
கிடக்கை கண்டும்
எங்கனம் மறந்து வாழ்கேன்! ஏழையேன்
ஏழையேனே?''

ஒரு முறை அக்பர் பாதுஷா, பீர்பாலிடம் கேட்டாராம்,'இந்திய நதிகளுள் சிறந்தது எது?

''யமுனை?'' பீர்பால் உடனே சொன்னார்.

''கங்கையல்லவா!'' அக்பர் வியப்புடன் கேட்டார்.

'கங்கை வெறும் நதியா, அமிர்தமல்லவா அது!' என்றார் பீர்பால்

அமிர்தம் என்று போற்றப்படும் அளவுக்கு பெருமை வாய்ந்த கங்கையைவிடப் புனிதமான காவிரி என்கிறார் ஆழ்வார்.

கங்கைக்கில்லாத புனிதமென்ன காவிரிக்கு?

திருவரங்கப் பெருநகருள் அரங்கன் திருவடியைத் திரைக்கையால் அடிவருடும் பேறு காவிரிக்குக் கிடைத்த பேறு.

இதே பேறு கங்கைக்கும் கிடைக்கவில்லையா?

வாமனாவதார காலத்தில் ஓங்கி உயர்ந்த திருவிக்கிரமர் திருவடியை நீராட்டும்பேறு அன்றே கிடைக்கவில்லையா?

காவிரிக்கென்ன தனிப் பேறு?

கங்கை, என்றோ ஏதோ ஒரு அவதாரத்தில் திருமால் திருவடியை நீராட்டும் பேறு பெற்றிருக்கலாம்.

ஆனால் காவிரி அரங்கன் முடிவைத்த குடதிசையிலும், அடி நீண்ட குணதிசையிலும் எப்போதும் பாய்கின்ற பெரும்பேறு பெற்ற தாயிற்றே? இது கங்கைக்குக் கிடைக்காத பேறு தானே!

பெரியாழ்வார் தேவப் பிரயாகையெனும் திருப்பதியைப் பாடி முடிக்கும்போது பயன் கூறும் பாட்டில் அப்பாடல்கள் தங்கிய நாவர்க்குக் கங்கை ஆடிய பயன் கிடைத்து விட்டதாகக் கூறுகிறார்.

'கங்கையில் திருமால் கழலினைக் கீழே குளித்திருந்த கணக்காமே'

குலசேகரரோ இன்னும் ஒரு படி மேலே போய்,

''ஆடிப்பாடி அரங்கவோ? என்றழைக்கும்
தொண்டரடிப்பொடி
ஆட நாம் பெறில், கங்கை நீர் குடைந்
தாடும் வேட்கை என்னாவதே''!

என்றே பாடி விட்டார்.

திருவரங்கம் தொழும் தொண்டரடிப் புழுதித்துகள் கங்கையிலும் புனிதமாயது எனக் குறிப்பால் உணர்த்துகிறார்.

இதே கருத்தில்தான் ''கங்கையிலும் தீர்த்தமலி கணபுரம்''என குலசேகரர் தாலாட்டில் தனியே குறிப்பிடுகிறார்.

கணபுரத்துத் தீர்த்தம் என்ன! காவிரித் தீர்த்தம்தான் முடிகொண்டான் ஆற்றுநீராக, நித்திய புஷ்கரணியாக, சிலை கங்கையாய், ஆழ்கடலாய். ஆண்டவனாகவேகூட பாராட்டப்படலாம். ஜீவநதியாகப் பொங்கிப் பிரவகிக்கலாம்.

ஆழ்வார்களின் அழகுத் தமிழால், அன்புத் தமிழால், அருட்தமிழால் பாராட்டப்படும் பெரும்பேறு காவிரிக்குக் கிடைத்தது.

ஈரத்தமிழ் நாவில் நடைபோடும் பேறிழந்த கங்கை,காவிரிக்குத் தலை வணங்க நேரிடுகிறது. கங்கையில் புனிதமாய காவிரியாகிறது பொன்னி?

ஆறு பொங்கிப் பரந்து பாய்வது இயல்புதான். மயிலாடுதுறை சந்திப்பருகே காவிரி மங்கு காவிரியாகத் தோன்றும் சிற்றாறுபோல, ஆனால் திருச்சி அருகே அரங்கனைக் காணும் ஆர்வத்தில், பொங்கி வருகிறது காவிரி. அரங்கன் அடியும் முடியும் தடவிப் பார்க்க பரந்து கொள்ளிடமாகவும், காவிரியாகவும் விரிந்து பாய்கிறது.

காவிரி பாய்வதால் பூம்பொழில் நிறைந்த அரங்கமாகிறது.

இப்பூம்பொழில் அரங்கம் சிறிய திருமடலில், கலியன் வாக்கில்'ஆராமம் சூழ்ந்த அரங்கமாகிறது'.

திருமால் கோயில் கொண்டருளிய திவ்ய தேசங்களில் நின்றகோலம் உண்டு. இருந்த

கோலம் உண்டு. கிடந்த கோலமும் உண்டு. கிடந்த கோலத்துள்ளும் மாற்றங்கள் உண்டு.

கருமாமுகிலுருவன், கனலுருவன், புனலுருவன், பெருமால் வரை உருவன் அருமா கடலமுதன் சிறுபுலியூரிலே பாலனாகச் சயனித்துள்ளான். எழுந்திருந்து பேச முயலும் கேசவனாக ஆராவமுதன் திருக்குடந்தையிலே பள்ளிக் கொண்டருள்கிறான்.

திருக்கடல்மல்லை கடற்கரையிலே தல (தரை) சயனனாகக் காட்சி தருகிறான். நீண்ட நெடும்பள்ளி கொள்கிறான்அனந்தசயனத்தில்,

எவ்வுள், வெஃகா, நீர்மலை, வெள்ளறை அன்பில், வட்டாறு என இன்னும் பல திவ்ய தேசங்களில் கண் வளரும் கண்ணனாய், காகுத் தனாய் கோயில் கொண்டிருக்கலாம்.

ஒரே ஒரு கிடக்கைதான் ஓர் ஆழ்வாரை ''அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினை காணாவே'' எனப் பிச்சேற்றிப் பேச வைத்தது

''இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகமாளும் அச்சுவைப் பெறினும் வேண் டேன்'' என அமுதை உப்புச்சாறாக்கி, தொண் டரடி சுவைத்த அமுதச் சுவை அரங்கன் திருக் கோலம்தான்.

'குடதிசை முடியை வைத்து, குணதிசை பாதம் நீட்டி' வடதிசை பின்புகாட்டிக் கிடந்த கிடக்கையே அக்கிடக்கை 'ஒப்பற்ற கிடக்கை'

'குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில் எழுகமலப்பூவழகர்'.

அவர்தம் அழியா அழகு கண்டு, அழியும் மனைவியழகுக்கு அடிமை செய்த பிள்ளை உறங்கா வில்லிதாசர்,அரங்கனுக்கே ஆட்பட்ட வரலாறு நாம் அறிவோம். ஆம், அருளாளர், இராமாநுசரால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாறுதான் அது.

ஆனால், அழியாப் பெருஞ்செல்வப் பேர ழகை அநுபவித்துக் கொண்டிருந்த தொண்ட ரடிப் பொடியாழ்வார் அரங்கன் கிடந்த கோலத்தை மறந்து மாலையில் சிக்கி ஆடலழகி தேவதேவி நின்ற இருந்த, கிடந்த, நடந்த கோலத்தில் மயங்கித் தன் நிலை இழந்து அவதி யுற்றார்.

பரம்பரை ஏழையின் துயரத்தைவிட பெருஞ்செல்வராயிருந்து ஏழையானவன் துயர் மிக அதிகம். அழியா அழகன் அரங்கன் எழிலை மறந்தார்...மறக்க. முடியா மன்மதன் தாதை எழிலை மறந்தார்..... அரங்கனைத் துறந்து

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு !

—பட்டினத்தார்

அழகியை மனத்தகத்தே வைத்து, பெரும்பழி யுற்று சிறை வாழ்வு ஏற்று சிறுமைப்பட்டார்.

அவர் நெஞ்சை விட்டு நீக்க வொண்ணாத வனை நீக்கியதெப்படி!

அரங்கனுக்காட்செய்யும் பெரும் கைங் கர்யச் செல்வத்தை இழந்தது எப்படி!

பெண்ணாசை மயக்குதான்.

அவனருளாலேயே பின்னால் மாயப் பெண்ணாசை விலகி மீண்டும் அரங்கன் அருள் வட்டத்தில் இணைகிறார். அது முந்தைய பிணைப்பின் தொடர்ச்சி.

பிணைப்பு என்றால் சாதாரண பிணைப்பா? மிக உறுதியான பிணைப்பு.

எப்படிப்பட்ட பிணைப்பு!

குழந்தை 'எங்கப்பா' என்று சேர்த்து பிணைத்துக் கொள்ளும்.

வேடிக்கைக்குப் போட்டியாக வர விரும் பும் தாயையும், குழந்தை விலக்கும்; தந்தை யைச் சேர விடாது. திருவோடு அகலாது இணைந்த திருமாலிலிருந்து 'திருவை' விலக்கி திருமால் என வெறும் 'மால்' ஆக்கி ஆழ்வார்க் 'குழந்தை எங்கள் மால்' என்று தனி உரிமை கொண்டாடுகிறது.

எங்கும் எல்லார்க்கும் உரிய இறைவனை 'எங்கள் மால்' இறைவன் ஈசன் என்று சொந் தம் கொண்டாடும்போது நெருக்கம் அதிக மாகிறதல்லவா!

இப்படி நெருங்கியிருந்தவர்மாலைமறந்து மங்கையைச் சேர்ந்து, பிரிவாற்றாது சிறை யில் வாடி தவறுணர்ந்து திருந்திய பின் மீண்டும் அவன் பணிக்கே திரும்புவதுதான் ஆழ்வார் வாழ்க்கை அவனிக்குக் காட்டும் பாடம்.

திருமாலையில் இந்த மலர் காட்டும் ஒளி இதுதான்....மணம் இதுதான்.

சுகம் தரும் சங்கரன்

"இசையடிப் பொடி" பெரம்பலூர்

இது விண்வெளியுகம். அணுசகாப்தம் 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே 'அணுவிற்கணு வினை ஆதிபிரானை' என்று சித்தர் பரம்பரையின் முதல்வராக விளங்கும் திருமூலர் கூறுகிறார்.

சைவத்திருமுறைகள் பன்னிரெண்டில் பத்தாம் திருமுறையாகிய 'திருமந்திரத்தில்' சிவனையும்; சிவநாமாவையும்; சிவமந்திரமாகப் பேசுவார் திருமூலர். தமிழ் மூதாட்டி அவ்வையாரும் 'சிவத்தைப் பேணுதல் தவத்திற்கழகு'' அரனை மறவேல்' என்றும்; இராமலிங்க அடிகளார் அன்பே சிவம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். 'அரன்' என்பது உயிர்ச்சொல். 'சங்கரன்' என்பது உயிர்மெய்யாகும். 'சங்கரன் 'என்பது வடமொழி சொல்.

உலகிலுள்ள அனைத்து உயிர்களிடத்தும் உறைபவன் ஈசன். அவனை 'உலகநாதன்' என்றும்; 'சர்வயக்ஞன்' என்றும்; 'வேத நாயகன்' என்றும்; ஆயிரம் பெயர்களால் அழைப்பர். அவற்றுள் ஒன்று 'சங்கரன்'. சங்கரன் என்ற சொல் சுகத்தைக் கொடுப்பது என்ற பொருளுடையது. நமக்கு நேரும் இன்னல்கள் நீக்கிக் காப்பவர் சங்கரன்.

மும்மூர்த்திகளில் முதல்வர் சிவபெருமான் ஒருவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன் பார்வதி நாயகன்.: வேத நாயகன்; உலகநாதன்; பித்தன்; பொன்னார் மேனியன்; சுடலையாண்டி; எல்லாப்பிழையும் பொறுத்தருளும் பெம்மான்; சாமகானப் பிரியன்; அருள் வடிவானவன்; உள்ளம் கவர் கள்வன்; பவன்; அரன் என்று பல பெயர்களால் சிவபெருமானை அழைக்கிறோம்.

சைவ சித்தாந்தங்கள் பதினான்கு என்பர். 'சித்தாந்தம்' என்றால் பெற்ற முடிவு என்று பெரியோர் கூறுவர். சிவனைப்பற்றி சைவ சித்தாந்தம் தரும் விளக்கமாவது :-'சிவன்' என்னும் சொல் பேரின்ப வடிவினன் எனவும்; தூய இயற்கை உணர்வினன்'' எனவும் எத்தகைய மாறுதலுமின்றிச் செம்பொருளாய் நிற்பவன் எனவும் விளக்கம் தருகிறது.

ஐந்தொழில் புரியும் அற்புதக்கூத்தனான சங்கரனின் ஆக்கல்; காத்தல்; அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும், உடல் பற்றியன மறைத்தல்; அருளல் ஆகிய இரண்டு தொழில்களும் உயிரைப் பற்றியன என்பர். அவனைச் சத்து சித்து ஆனந்தன்— சச்சிதானந்தன். அதாவது நிலைப்பு-அறிவு-மகிழ்ச்சி ஆகிய நிலைகளிலும் அவனுடைய சக்திகளை - அவ்யத்தம் - அநதி-அவித்யா என மூன்று குண வடிவிலும் கூறுவர்.

சிவன் நவக்கிரகங்களில் சூரிய அம்சமானவரெனவும்; அம்பிகை சந்திர அம்சமானவரெனவும் கூறுவர். நவகிரகங்களில் தலையாய சூரியன் சிவனை வழிபடுதலால் (சூரிய பூஜை) சூரியனுக்கு மற்ற கிரகங்கள் மாதிரி கதி பேதம் இல்லை. இன்றும் தமிழ் நாட்டில் செம்பொன்னார் கோவில், கும்பகோணம், திருக்கண்டியூர் குன்றத்தூர்; திருவேதிக்குடி, திருநாவலூர்; துறையூர் ஆகிய சிவத்தலங்களில் சூரியபூஜை நடைபெற்று வருகிறது.

''அருக்கனிற் ஜோதி வைத்தோன்' என்று சைவத் திருமுறை 8-ஆம் திருமுறை திருவாசகம் திருவண்டப்பகுதியில் மாணிக்கவாசகர் சிவனைக் குறிப்பிடுகிறார்.

சஞ்சிதவினையகல சங்கரனை வழிபட வேண்டும். உடல்வளத்தை சூரியனும், முக்தியை திருமாலும்,; ஞானத்தை ஈசுவரனும் அருளும் தெய்வங்கள் என்பர்.

பிரதி மாதமும் தேய்பிறையில் வரும், சதுர்த்தசி மாத சிவராத்திரி, ஆகும் மாசிமாதம் வரும் சிவராத்திரியை மகாசிவராத்திரி என்பர் பிரதோஷம் ஆவது சூரிய மறைவுக்கு முன்-பின் மூன்றே முக்கால் நாழிகை; வளர்பிறை-தேய்பிறைகளில் - மார்கழி திங்களில் நிறைமதி நன்னாளில் வரும்-திருவாதிரை நாள். அன்றே சிவன் ஆக்கல்; காத்தல்; அருளல் உள்ளிட்ட ஐந்தொழில்களையும் துவங்கியதாக வேதாகமம் கூறும்.

'மாசித்திங்களில் மாசிமக நீராட்டு விழாவும்; தொடர்ந்து தேய்பிறையில் சதுர்த்தசி நாளில் மகாசிவராத்திரியும்; மாசில் வீணையும் மாலைமதியமும் உடைய சிவனுக்குரிய சிறப்பு நாட்களாகும். பங்குனி உத்திர நன்னாளில் சிவனுக்கும்-உமைக்கும் திருமணம் நடந்தது என்பதும் கருதற்பாலது. இவைகள் அனைத்தையும் கூட்டி பார்க்கில் ஒரு ஆண்டில் சிவவழிபாட்டிற்கென 39 நாட்கள் சிறப்பு நாட்களாக அமைந்துள்ளன.

திராவிட வேதமான சைவத்திருமுறைகள் பன்னிரெண்டிலும்; திருமூலர் காலந்தொட்டு ஆதிசங்கரர் காலம் வரை சங்கரனை வழிபட்டு சுகமடைந்த சிவனருளாளர்கள் பலருண்டு.

காளத்தி வேடன் கண்ணப்பன் ஆறே நாட்களில் அருள்பெற்ற சிவனடியார். தெய்வத் தமிழ்நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் 274 என்பதைத் தருமை ஆதீனம் கணக்கிட்டு தந்துள்ளது.

விஸ்வம் என்றால் உலகம். வடமொழிச் சொல். நாதன்-தலைவன். விசுவநாதனே சிவன். சிவனே சங்கரன்—சுகம் அளிப்பவன். பதினான்கு லிங்க வடிவிலும்-64 அட்டார்த்த கலைவடிவிலும் காட்சி (மூர்த்தி) தருபவனும் அவனே.

"இந்திய மகளிர்" பற்றி சுவாமி விவேகானந்தரின் கருத்துகள்

டாக்டர் தி. கமலி
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், சென்னை-600032.

சுவாமி விவேகானந்தர் இந்தியப் பண்பாட்டை உலக நாடுகளில் பரப்பியவர்; இளம் துறவி; ஆன்மீகத்தைத் தேசப்பற்றுடன் இணைத்தவர். இந்திய தேசிய வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய தொண்டு ஆழ்ந்து அகன்றது. சமூகம், பண்பாடு, சமயம், தேச முன்னேற்றம் அவற்றில் உள்ள சிக்கல்களை எடுத்து விளக்கியவர்; மக்களினடயே விழிப்புணர்வைத் தோற்றுவித்தவர். சிந்தனையாளர்களது மனச்சான்றினைத் தட்டி எழுப்பியவர். இந்திய தேசத்தை உருவாக்கிய இளஞ்சிற்பி எனலாம். 'இந்திய மகளிர்' பற்றிய அவரது கருத்துக்கள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

இந்திய தேசத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் 'நீண்டகாலமாகப் பெண்டிரையும், பாமரர்களையும் புறக்கணித்து வந்ததே' என்று குறிப்பிடுகிறார். 'மாதரை அடிமைப்படுத்தி அடக்கியாள்வது; சாதிக் கட்டுப்பாடுகளினால் ஏழைகளைக் கசக்கிப் பிழிவது' எனும் இருபெருங் கேடுகள் அகற்றப்பட வேண்டும் என்கிறார்.

தூய அன்னையின் சின்னம், குழந்தைகளைப் பெறும் இயந்திரமாக ஆக்கப்படுவது மாபெரும் சாபக்கேடு எனபது அவரது கருத்து. 'ஆடவன் பெண்ணுக்குக்கட்டளை இடவேண்டும்' என்று குறிப்பைக்காட்டும் எதுவும் அவருக்கு வெறுப்பினை விளைவிப்பதாகவே இருந்தது.

பெண் உரிமைகளின் பாதுகாவலராகத் திகழ்ந்தார். 'சத்தியத்திற்குப் பால் வேற்றுமை இல்லை' என்பது அவருடைய கருத்து 'ஆணோ பெண்ணோ உண்மையான விமோசனம் பெறுவது தன்னுள் எழும் ஆன்மீக உணர்வை முறுகச் செய்வதனால்தான்' என்பது அவரது கருத்து.

பெண் உரிமை பேணிய முதல் துறவி அவர்தான். அன்னியர் ஆட்சியிலிருந்து அரசியல் விடுதலை பெறுவது மட்டும் தேச சுதந்திரம் ஆகாது. ஆண், பெண் வளர்ச்சியைத் தடை செய்யும் தளைகளை உதறி, உரிமை பெறுவதும் அவசியம்' என்பது அவரது மணி வாக்கு.

'இந்தியா உருவாக்கிய இலட்சியப் பாத்திரம் சீதை, தூய்மையினும் தூய்மையாள்; பரிசுத்தமானவள்; கற்பெனும் பெயரினள்; கடவுள் போற்றும்தெய்வம்; முணுமுணுப்பின்றி மௌனமாகத் துயர் பொறுத்த சீதையின் அடித்தடம் சீதையின் சேய்களாகிய இந்தியரை ஆற்றுப்படுத்தும்' என்பது அவரது நம்பிக்கையாக இருந்தது. சாவித்திரி போன்று பேரன்பினளாக, திண்ணியளாக, அறிவாற்றல் மிக்கவளாகப் பெண்டிர் இருந்துவிட்டால் குறையே இல்லை என்று கருதினார்.

''இந்திய மகளிர் அமெரிக்க மகளிரைப் போன்று கல்வியாற்றல் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தூய தன்மை பாதிக்கப்படாமல்இருக்க வேண்டும். எல்லாப் பெண்களுக்கும் கணவனல்லாத ஒவ்வோர் ஆணும் பிள்ளையாகவே இருக்க வேண்டும். தன் மனைவியைத் தவிர, வேறு பெண்மணி ஒவ்வொருவரும். ஆணுக்கு

அன்னையாகவே இருக்க வேண்டும்' ஆண்கள் என்றும் பெண்கள் என்றும் நினைப்பதைவிட்டு ஒருவரையொருவர் நன்கு மதித்து, ஒருவருக்கொருவர் உதவி புரிய பிறந்திருக்கும் மனித உயிர்கள்' என்றே நினைக்க வேண்டும்'' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

கற்பே சமூகத்தின் உயிர்; கற்பினின்றும் வழுவுதலே ஒரு நாட்டின் அழிவைக் குறிக்கும் சாவுக்குறி; ஆண், பெண் இருபாலரும் ஒழுக்க சீலராக இருத்தல் வேண்டும்.

பெண்களை, ''அற்பப்புழுக்கள்' 'நரகத்தின் வாயில்கள்' என்றெல்லாம் அழைத்ததுதான் இந்தியரது வீழ்ச்சிக்குக் காரணம் என்பது அவரது கருத்தாகும். பெண்கள் ஆடவரின் பிரதிகளன்று; பெண்மை, பெருந்தன்மை, நல்லொழுக்கம், தாய்மை ஆகியவற்றின் இருப்பிடம் என்பது அவரது மதிப்பீடாகும்.

சீனமகளிர் தம் கால்களை இறுகப் பொதிந்து வைத்தல் தீயசெயல்; ஆனால் மேனாட்டு மகளிர் அணியும் கச்சுக்கள் உடல் வடிவிற்குச் செய்யும் தீமையில், செய்துகொண்டே வரும் தீமையில், பதினாயிரத்தில் ஒரு பங்குகூட கால்களை இறுகக் கட்டும் செயல் பயக்கவில்லை' என்று சாடுகிறார்.

இந்தியாவில் இலட்சியப் பெண்மணிதாய். அன்னையே முன்னறி தெய்வம்; 'பெண்' என்ற சொல் தாய்மையை நினைவுபடுத்துகிறது. மேல்நாட்டிலோ பெண் என்றால் மனைவி; பெண்மை எனும் இலட்சியம் அங்கு மனைவியாகக் குவிந்துள்ளது. இந்தியாவில் தாய்மைக்குச் சிறப்பிடம் உண்டு என்று மேலைநாட்டு மகளிர் பற்றிய மதிப்பீட்டினையும், இந்திய மகளிர் பற்றிய மதிப்பீட்டினையும் விளக்குகிறார்.

பெண்ணிடம் அமைந்துள்ள பெண்மையைப் பூர்த்தியாக்குவது தாய்மையே ஆகும். குழந்தைக்காகத் தவம் கிடக்க வேண்டும். பிரார்த்தனையின் பலனாகப் பிறக்காத குழந்தைஒவ்வொன்றும் முறைகெடத் தோன்றியதே. வழிபாட்டின் பயனாகப் பிறக்கும் குழந்தையே சான்றோராகும்; அன்றேல், சமூகத்திற்காக ஒரு சாபக்கேடாக மாறும்; உடலுறவு புனிதமானது.கேலிக் கூத்தன்று; சாதாரண நரம்புப் பசித் தணிப்புமன்று; உடலின் மிருகஇச்சையின் பூர்த்தியுமன்று; தூயது; தாய்மையுடன் பிணைப்புற்று, வழிபாட்டிற்கு உரியவராவது மனைவியின் நிலை' என்று குறிப்பிடுகிறார்.

ஒரு பெண் இருமுறை மணப்பது மிகத் தாழ்ந்த இழிநிலையென்ற கருத்து உள்ளது. 'விதவைகளுக்கு மறுமணம் இல்லாமை ஒரு துன்பம். இளம் பெண்களுக்குக் கணவன் கிடைக்காதது ஒரு துன்பம்; எதை ஏற்பது; விதவையின் சங்கடத்தையா? வயது முதிர்ந்த கன்னிப்பெண்களின் சங்கடத்தையா? என்ற நிலை நேர்கையில்' கணவர்களைப் பெற இன்னும் முதல் முறைகூட வாய்ப்பைப்பெறாத ஏழையரின் நிலையைப் பரிசீலிக்க வேண்டும் என்கிறார்.

அனைவரினும் மிக உன்னத இடம் வகிப்பவள் அன்னை; அன்னைக்குப் பின் மனைவி; மனைவிக்கு அடுத்தது மகள்' என்றபடி நிலைப்படுத்துகிறார்.

'பெண்டிருக்கும், பாமரர்களுக்கும் கல்வி அளித்தாலன்றித் தேசத்தை முன்னேற்ற முடியாது' என்பது அவரது ஆழ்ந்த நம்பிக்கை, சமயம், கலைகள், அறிவியல், இல்லற நிர்வாகம், சமையல், தையல், உடல்நலம் இவைகளில் அடங்கியுள்ள முக்கியமான எளிய அம்சங்கள் இந்திய மகளிருக்குக் கற்பிக்கப்பட வேண்டும் என்பது அவரது கருத்தாகும்.

ஆணுக்கும், பெண்ணுக்குமிடையே மட்டும் இத்தனை வேறுபாடு பாராட்டுவது ஏன் என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது என்று அங்கலாய்க்கிறார். எல்லாவுயிர்களிலும் தோற்றமளிப்பது ஒரே ஆத்மாதானே! நீதிநூல்களைப்படைத்துவிட்டு, சட்டதிட்டங்களால் கட்டுப்படுத்தி ஆண்கள் பெண்டிரைத் தமக்கு வேண்டியனத ஆக்கித் தரும் இயந்திரங்களாக ஆக்கி விட்டார்கள். மகளிரை உயர்நிலைக்குக் கொண்டு வராவிட்டால் ஆடவர் உயர்வதற்கு வேறு வழிகள் உண்டு என்று மட்டும் எண்ணவேண்டாம் என்கிறார்.

பெண்டிர் பெருந்துயரத்தில் மூழ்கியிருக்கும் ஒரு குடும்பமோ, நாடோ உயர்வடையவே முடியாது. பெண் இனத்தை உயர் நிலைக்குக் கொண்டுவர வேண்டும். பெண்டிருக்கு முதலிலே கல்வியை அளியுங்கள். பிறகு அவர்கள் போக்கிலே விடுங்கள்; பிறகு அவர்கள் ஆடவருக்குச் சொல்வார்கள். தமக்கு என்ன சீர்திருத்தங்கள் வேண்டும் என்று.அவர்களுக்கு வேண்டிய விஷயங்களில் தலையிடுவதற்கு ஆடவர் யார்? என்று விவாதிக்கிறார்.

மணமாகாத கன்னிப் பெண்டிரும், பிரம்மசாரிணிகளான விதவைகளும் இடையிடையே பக்தி மிக்க பத்தினிப் பெண்டிரும் வாழ அனுமதிக்கப்படும் வகையில் இலட்சிய மடம் ஒன்று அமைக்க வேண்டும் என்று குறிப்பிடும் அவர் 'கன்னிமை காத்தல் உயர்வு' என்று மதம் பெண்களுக்குக் கூறினால், அம்மதம் ஆணுக்கும் அதையே விதிக்கிறது என்பதைக் கவனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும் என்கிறார்.

'ஆண்களுக்கு எதைக் கூறுவேனோ, அதையே பெண்டிருக்கும் கூறுகிறேன். 'பாரத தேசத்தை நம்பு; பாரதத்தின் கோட்பாடுகளில் நம்பிக்கை வை; வலிமை பெற்றிடு; நம்பிக்கை கொள். எதற்கும் வெட்கப்படாதே. தாம் பற்றுக் கொள்ள சிறகு ஒரு சிறிது உண்டெனினும், பிறர்க்கு வழங்குவதற்கு இந்தியரிடம் உலகில் எந்த மக்கள் இனத்தைக் காட்டிலும் ஆளபிறந்தன உண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்' என்பதே அவரருளிய உபதேசமாகும்.

சுவாமி விவேகானந்தரது வழிநின்று நல்லொழுக்கத்தையும், கடமையையும் காத்து உள்ளொளி பெறுவோம்; பாரத தேசத்தை உலகில் சிறந்ததாக உருவாக்குவோம்.!

உடம்பில் பஞ்ச பூதம்



அருள்திரு டாக்டர் சாயிமாதா சிவபிருந்தா தேவி
திலகவதியார் ஆதினம், புதுக்கோட்டை

உடம்பு வளர சமையல் தேவைப்படுகின்றது. உள்ளம் வளர சமயம் அவசியமாகின்றது. குறுக்கே வளர்பவை மிருகங்கள். யானை புலி சிங்கம் பன்றி ஆடு மாடு போன்றவை.உயரத்தில் வளர்பவன் மனிதன். குறுக்கு புத்தியில்லாமல் உயர்ந்த நிலையில் வளர வேண்டியவன் மனிதன்.

ஒரு பெரிய தோட்டம், அதில் நிறைந்த புல்வெளி, ஆயிரம் ஆடுகள் ஐநூறு மாடுகள் பல ஆயிரம் பன்றிகள் புலிகள் சிங்கங்கள் யானைகள் தினமும் நடக்கின்றன. வளைந்த புல் மறுபடியும் நேராகிப் பச்சைப் பசேலென்று காட்சியளிக்கின்றது. அந்தப் புல் வெளியில் மனிதர்கள் சிலர் தொடர்ந்து நடந்தால் புல் தீய்ந்து பூண்டுகள் கருகி பாதை ஒத்தையடிப் பாதையாகி விடுகின்றது.

மிருகங்கள் நடந்தால் புல் தீய்ந்து போவதில்லை. மனிதர்கள் நடந்தால் புல் தீய்ந்து போகிறதே! நம் பாதங்களுக்கே அவ்வளவு விஷம் உண்டா?.''நம் பாதங்கள் இவை எனில் நம் படிவங்கள் எப்படியோ?' என எண்ணி திகைக்கத்தானே வேண்டும்?

ஒரு பாம்பு இன்னொரு பாம்பைக் கடிப்பது கிடையாது. ஒரு புலி இன்னொரு புலியைக் கொல்லுவது கிடையாது. ஒரு சிங்கம் இன்னொரு சிங்கத்தைக் கொல்லாது. ஆனால் ஒரு மனிதன் தன்னையொத்த இன்னொரு மனிதனைக் கொலை செய்கிறான். மிருகங்களுக்குள்ள உணர்வுகள் கூட மனிதனுக்கு இல்லையா?

காடுகளிலே யானைக் கூட்டங்களைப் பார்க்கிறோம். ஒரு பெண் யானை பிரசவ வேதனைப்படுகிறது என்றால் மற்ற பெண் யானைகள் சுற்றி நின்று கொண்டு தம் துதிக்கையால் பிரசவ வேதனைப்படும் யானையின் வயிற்றுப்பாகத்தை அனுசரணையாகத் தடவிக் கொடுப்பதை நாம் பார்த்து வியந்து இருக்கிறோம். யானைக்கு இருக்கும் பாச உணர்வு பரிவு மனிதர்கட்கு ஏனில்லை?

மனம் படைத்தவன் மனிதன், மனத்தினால் சிந்திக்க வந்திக்க வாழ்த்த இயலும்! ஏன் இந்த உயர்ந்த மனத்தை நிந்தனைக்குரியதாக ஆக்கி வேதனைப்பட வேண்டும்?

மனம் உள்ளம் நெஞ்சம், இதயம் பெயர்கள் வெவ்வேறாகத் தெரிந்தாலும், இவற்றின் உணர்வு ஒன்றுதான்.

நினைப்பது நெஞ்சம்; உணர்வது உள்ளம், எண்ணுவது இதயம்.

''மன் மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன் மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத்துள்ளே மகிழ்ந்து இருப்போர்க்கு
மன்மனத்துள்ளேமனோலயமாமே''

என்பர் அருளாளர்கள். மனம் மகிழ்ந்திருக்க, அமைதியாக ஆனந்தமாக இருக்க, உடம்பும் நலமுடன் இருக்க வேண்டும். மன நலத்திற்கு உடல் நலமும் தேவையாகுப்.

திருமூலர் முதலில் உடலைப் பேணாத நிலை கூறி இந்த உடம்பிற்குள்ளே உரிய பொருளாகிய உத்தமன் இறைவன் குடியேறியிருக்கிறான். அவன் இருக்கும் உடம்பை முறைப்படி பேணிப் பாதுகாக்க அறிவுரை அருளுகிறார்.

'உடம்பினை முன்னம் இழுக்கு என்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுக்குள்ளே உத்தமன் கோயில்
கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே''

என்று அறிவுறுத்துகின்றார்.

நம் உள்ளம் பெரிய கோயில், ஊன் நிறைந்த உடம்பு ஆலயம், நம் வாய், இறைவனது கோபுரவாசல், இறைவன் ஒருவன் உண்டு என்று உணர்ந்தவர்கட்கு, இந்தச் சீவனே சிவனாகிறது என்றும் அருளாளர்கள் அறிவுறுத்துகின்றனர்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்;
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே.''

நம் உடம்பிற்குள்ளே பஞ்ச பூதங்களும் இருக்கின்றன. இவற்றை நாம் அறிதல் அவசியமாகிறது.

பாதத்திலிருந்து தொடை வரை மண்;
தொடையிலிருந்து இடுப்பு வரை நீர்;
இடுப்பிலிருந்து வயிறு வரை அக்னி;
நெஞ்சிலிருந்து மூக்கு வரை காற்று;
நெற்றிக்குமேல் தலை வரை ஆகாயம்.

பஞ்ச பூதங்களும் நமக்குள்ளே என்பதோடு, பஞ்சாட்சரமும் நமக்குள்ளே இருக்கின்றன. 'நமசிவாய' என்பது இறைவனுடைய திருநாமம். இது ஸ்தூல பஞ்சாட்சரமாம். 'சிவாயநம' என்பது மஹாமந்திரம். இது சூட்சும பஞ்சாட்சரமாம். 'நமசிவாய' என்ற மந்திரத்தை எழும்போதும் சொல்லலாம். அழும்போதும் சொல்லலாம். தேகம் விழும்போதும் சொல்லலாம். யாரும் சொல்லலாம். எவரும் சொல்லலாம். எங்கும் சொல்லலாம். எப்போதும் சொல்லலாம். கல்லைக் கட்டி அப்பர் பெருமானைக் கடலிலே போட்டார்கள். கல் மிதந்து வந்து கரையேறினார்.

''கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமசிவாயவே''

என்று தம் வரலாற்றை வனப்புடன் அப்பர் பெருமான் அருளுகின்றார்.

''நான் மறக்கினும் சொல்லு நா நமசிவாயவே' இது சுந்தரர் செந்தமிழ்.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதியது நாதன் நாமம் 'நமசிவாயவே''. இது ஞானசம்பந்தர் நற்றமிழ்.

எடுத்த எடுப்பிலே திருவாசகத்திலே மணிவாசகர். 'நமசிவாய வாழ்க'என துவங்குகிறார். நால்வரும் நன்றாக உணர்ந்தது 'நமசிவாய' என்பதாகும். 'நமசிவாய' என்னும் ஆண்டவனுடைய திருநாமத்தை. மஹா மந்திரமாக ஆக்கும்போது 'சிவாயநம' என்றாகின்றது. சிவாயநம என்று சிந்தித்து . இருப்போருக்கு அபாயம் ஒன்றில்லை என்பதுவும் அனுபவத்தில் நாம்கண்ட உண்மையாகின்றது.

சி சிவபரம் பொருள்
வ அவனுடைய அருட்சக்தி
ய உயிர்களாகிய நாம்
ந மறைப்பு சக்தி அல்லது திரோதான சக்தி
ம மலங்கள்
அடியிலிருந்து முடிக்குப் போவோம். நாமும் நற்கதி பெற முடியும்.

ம என்ற மலங்கள் தேய்ந்தால்
ந என்ற மறைப்பு சக்தி நீங்கி
ய என்ற உயிர்களாகிய நாம்
வ என்ற அவனது அருட்சக்தியின் மூலமாக
சி என்ற சிவபரம் பொருளை எட்டிப்பிடிக்கலாம்.

சி முகம்
வ இரு தோள்கள்
ய மார்பகம்
ந இரு தொடைகளின் நடுவில்
ம பாதங்கள் இரண்டிலும்

நமது உள்ளத்தைக் கோயிலாகவும், நமது உடம்மையே ஆலயமாகவும், நமது வாயைக் கோபுர வாசலாகவும், மெய், வாய், செவி, கண், நாசி என்ற ஐம்புலன்களையும் காளாமணி விளக்குகளாகவும் கண்ட நம்மெய்யடியார்களின் உணர்வுகளை நாம் புரிந்து கொண்டு மனிதர்களாகப் பிறந்த நாம் மேல் நிலைக்குச் செல்ல வழி கண்டாக வேண்டும். .எங்கே நிம்மதி? எதில் அமைதி? என்றுணர வேண்டும்.

''ஆசைப் படப் பட ஆய்வரும் துன்பம்
ஆசை விட விட ஆனந்தமாமே''

என்பர் திருமூலர்.

'யாதனின் யாதனின் நீங்கியான்நோதல்
அதனின் அதனின் இலன்''

என்பர் வள்ளுவர்,

ஆசை அதிகமாக அதிகமாகத் துன்பம் பெருகிவரும், ஆசையை விட விட ஆனந்தம் கூடும். எது எதிலிருந்து விடுபடுகிறோமோ அது அதிலிருந்து ஏற்படும் துன்பமும் நீங்கிப் போகும். இதனைத்தான் சித்தார்த்தரும், 'சித்த சுத்தியுடன்' ஆசையே அனைத்து பாவங்களுக்கும் காரணம்' என்று உண்மை கண்டு உரைத்தார்.

பற்று அவா, ஆசை, பேராசை இதில் எதுவுமே பற்றக் கூடாது-உலகத்தைக் கட்டி ஆள்கிறவர்கட்கும் கடலும் கூட எமக்குச்

சொந்தம் என்பதிலே-அதுவும் தனது என்ப திலே ஆசையுண்டு. தேவேந்திரனைவிடப் பொருள் அதிகம் பெற்றவர்களும், மேலும் மேலும் பொருள் சேர்க்க விரும்பி, இரும்பைத் தங்கமாக்கும் ரசவாத வித்தை தெரிந்தவரை நாடிச் செல்வர். உலகில் எது எது தோன்று கிறதோ அது அது ஒரு நாளைக்கு அழிந்து இல்லாமல் போகும் என்பதைத் தெரிந்து கொண்ட பின்னரும், 'தாம் நீண்ட பல ஆண்டுகள் வாழ வேண்டும் என்ற ஆசையில் காயகல்பம் எங்கிருக்கிறது? எனத் தேடி அலை வதும் உண்டு. கடைசியில் நாம் ஏன் பிறந் தோம்? என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று யோசித்துப் பார்த்தால், நாமெல் லோரும் செய்து கொண்டிருப்பது நன்றாகவே விளங்கும்.

நாமெல்லோருமே பசி தீர உண்கின் றோம். உறங்குகின்றோம். ஒன்றைவிட்டு ஒன்றிலே பற்ற வைத்து வீணிற்கு வேதனை யைக் கூட்டிக் கொள்கிறோம் என்று அருளா ளர்கள் அற்புதமாக நம்மை அளவிட்டு உரைத் தார்கள்.

''ஆசைக்கோர் அளவில்லை
அகிலமெல்லாம் கட்டி ஆளினும்
கடல் மீதிலும் ஆணை செலவே
நினைப்பர் அளகேசர்
நிகராக அம்பொன் மிக
வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்
திடுவர், நெடுநாளிலிருந்த பேரும்
நிலையாகவேயினும் காய
கற்பம் தேடி நெஞ்சு
புண்ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர
உண்பதும் உறங்குவதுமாகவே
முடியும்; ஒன்றைவிட்டு
ஒன்று பற்றிப்
பாசக் கடற்குள் வீழாமல்
மனதற்ற பரிசுத்த நிலை
அருள்வாய், பார்க்குமிட மெங்கும்
ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே''

என்று தாயுமானைப் பெருமான் நம் மேல் உள்ள பரிவில் பகருகின்றார்.

மனதற்ற பரிசுத்த நிலை-இது மிக மிகப் பெரிய நிலை!

''யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா
ஸஹ ஆனந்தம் ப்ரஹ்மனோ வித்வான் ந விபாதி கதாச்சனேதி''

என்று உபநிடதம் உற்றபடி உணர்த்துகின்றது.

எதனின்றும் வாக்குகள் மனத்தை எட் டாமல் திருப்பிவிடுகின்றனவோ அப்படிப் பட்ட பிரும்மத்தை அறிந்தவன் எதற்கும் அஞ்சமாட்டான். அவன் ஆனந்தமயமாகவே இருப்பான் என்கின்றது. இதுதான் மனதற்ற பரிசுத்த நிலையோ? என நாம் எண்ணு கிறோம்.

மின்சாரத்தை நாம் கண்ணால் காண முடி யாது. உடம்பின் உள்ளே உறையும் உயிரை யும் நாம் பார்க்க இயலாது. மின்சாரத்தைத் தனியே பிரித்தெடுத்துக் காண இயலாவிடினும் உடம்பினுள்ளே உள்ள உயிரையும் தனியே பிரித்தெடுத்துப் பேதம் காண முடியாவிடினும், விளக்கு எரிவதிலிருந்து விசிறி சுழல்வதி லிருந்து மின்சாரம் வேலை செய்கிறது என நாம் அறிகின்றோம்.

உடல் இயங்குவதிலிருந்து உயிரையும் ஓரளவு உணர்கிறோம். ஒரு மண் பானையைப் பார்க்கின்றோம். பானையைப் பார்த்த மாத்தி ரத்திலே-பானையை நாம் செய்யாத காரணத் தினாலே, பானையைச் செய்த குயவனுடைய நினைவு வருகின்றது. ஒரு பூமாலையை நாம் பார்க்கிறோம். அப் பூமாலையை நாம் கட் டாத காரணத்தினாலே, மாலையை கட்டியவ னுடைய நினைவு ஏற்படுகின்றது. இதனைப் போலவே இந்த உலகத்தைப் பார்க்கிறோம். இந்த உலகத்தை நம்மால் படைக்க முடியாது என்கின்றபோது இந்த பரந்த விரிந்த உலகைப் படைக்க, ஒப்பற்ற ஒருவன் வேண்டும் என்ற உறுதிப் பாங்கும் உள்ளத்தில் பதிகின்றது. தனு கரண, புவன போகம், உடம்பு, அவயவங்கள் உலகம் அனுபவிக்கும் இன்பம், தர்மம், அர்த் தம் காமம் மோட்சம், அறம், பொருள். இன்பம். வீடு, சரியை கிரியை, யோகம் ஞானம், அப்பர், சம்பந்தர், சுந்தரர் மணி வாசகர், கிழக்கு, மேற்கு தெற்கு வடக்கு- நான்கு நானகாகச் சிலவற்றை நயம்பட இறை வன் அமைத்து தந்துள்ளான். நான்கும் (நாலும்) தெரிந்தவன் மனிதன் என்ற பழ மொழியும் உண்டு.

ரிக், யஜீர், சாமம், அதர்வணம் வேதங் களும் நான்கே, ஆதி சங்கர பகவத் பாதாளுக்கு நான்கு சீடர்கள். முல்லை, மருதம், நெய்தல் குறிஞ்சி நிலங்களும் நான்கே. ஆயினும் பஞ்ச பூதங்களும், பஞ்சாட்சரத்திற்குள் அடங்கி ஆனந்தம் அடைகின்றன. பஞ்சேந்திரியங் களும் பஞ்சாட்சரத்திற்குள் ஒடுங்கி, உண்மை, அறிவு, மகிழ்வு (சச்சிதானந்தம்)பெறுகின்றன.

'நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்''

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்த பின்..
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''

நிஷ்டை கூடிய உயர்யோக நிலையிது. 'ஞாதுரு ஞானம், ஞேயம்' என்பர் உயர் சாத்திரம் பயின்றோர். காண்பான், காட்சி, காட்சிப் பொருள்.

''அறிவானுந்தானே!

அறிவிப்பான் தானே!''

அறிவாய் அறிகின்றான் தானே என்கிறது காரைக்காலம்மையாரின் மூத்த திருப்பதிகம்.

திருவண்ணாமலையில் மலையைச் சுற்றியுள்ள குகை ஒன்றில் ஒரு துறவிவசித்து வந்தார். குகையில் வசித்ததால் குகை நமசிவாயர் என்ற பெயர் ஏற்பட்டது.

இவரிடம் ஒரு சீடர் வந்தார். அவர் பெயரும் நமசிவாயர்தான். தாம் குகை நமசிவாயராகவும் வந்த சீடர் குருநமசிவாயராகவும் இருக்கப் பணித்தார்.

குகைநமசிவாயர், சித்திரை மாதத்துக் கொளுத்துகிற வெயிலில், மரக்கிளையில் அமர்ந்திருந்தார். குருநமசிவாயர் குகை நமசிவாயருக்கு வெப்பம் தவிர விசிறிக்கொண்டிருந்தார். நல்ல உச்சிப் பொழுது. மலையைச் சுற்றி அந்த வெப்பமான வேளையில் யாரும் நடக்கவில்லை. விசிறிக்கொண்டிருந்த குரு நமசிவாயர் திடீரென்று சிரித்தார். குகை நமசிவாயர் சுற்றும் முற்றும் பார்த்தார். யாரும் சந்தடியில்லை. இந்நிலையில், யாரைப்பார்த்து எதற்காகக் குருநமசிவாயர் சிரித்தார்?. தெரியவில்லை.

''ஏனப்பா சிரித்தாய்''?

யாரைப் பார்த்துச் சிரித்தாய்?

என கேட்டார். அதற்கு குரு நமசிவாயர் சொல்லுகிறார்:- திருவாரூரில் தியாகராஜரும் கமலாம்பிகையும் பவனி வருகின்றனர். அவர்கள் முன்னிலையில் ஒரு தாசி பரதநாட்டியம் ஆடுகிறாள். ஆடிவரும் போது, ஒரு வாழைப்பழத் தோலிலே வழுக்கி விழுகிறாள். அதைக்கண்டு எல்லோரும் சிரித்தனர், நானும் சிரித்தேன்'' என்றார்.

இன்று தொலைக்காட்சியைக் கண்டு அதிசயிக்கின்றோம்.

குரு நமசிவாயர் இருந்த இடம் திருவண்ணாமலை குகையில்; பார்த்து விட்டுச் சிரித்த நிகழ்ச்சி நடந்த இடமோ திருவாரூர். பார்த்தார் குகை நமசிவாயர். சிஷ்யராகவந்த குரு நமசிவாயர், நமக்குத் தெரியாத காட்சியை

அன்பே சிவம்

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்

—சுவாமி விவேகானந்தர்

அவர்கண்டு விட்டார்; இவர் பெரியவரே என்றெண்ணி, ஒரு சோதனை செய்கிறார்.

''குரு நமசிவாய! எமக்கு வாந்தி வருகிறது'' என்றார். உடனே குரு நமசிவாயர் தமது இரு கரங்களையும் ஏந்தினர். அவர் கரங்கள் நிரம்புகிற அளவிற்கு வாந்தி எடுத்து குகை நமசிவாயர் நிறுத்திக் கொண்டார்.

திடீரென்று யாருக்கும் உடனாக வாந்தி வந்து விடாது; வந்த வாந்தியையும் அளவோடு நிறுத்திக் கொள்ளவும் இயலாது. குகை நமசிவாயரோ திடீரென்று வாந்தி எடுத்தார். குரு நமசிவாயரின் குவிந்த கைகள் நிரம்பியதும் நிறுத்திக் கொண்டார்.

''குரு நமசிவாயா! நான் எடுத்த வாந்தியை-மனிதர்களது காலடி படாத இடத்திலே கொட்டிவிட்டு வா'' என்றார்.

மனிதர்களது, காலடிபடாத இடம் எது? அது தன் வயிறுதான் என்று உடனாக நிர்ணயித்து, தன்வாயின் வழியாக வயிற்றுக்குள் கொட்டிக் கொண்டார். நாயைத் தவிர வேறு யாராலும் இச்செயலைச் செய்ய முடியாது. எப்படி மனம் ஒப்பி இப்படிச் செய்தார்? ஓடும் செம்பொனும், ஒப்பவே நோக்குகின்ற சம நோக்கோ? பார்த்தார் குகை நமசிவாயர்- அப்பனே! குரு நமசிவாயாய! இனி நீ நம்மிடம் இருக்க வேண்டியதில்லை. தெற்கே செல்; திருமடங்கள் அமைத்து வழி வழி குரு நமசிவாயமாக விளங்குவாயாக'' என வாழ்த்தி அனுப்பினார்.

மயிலைப் பிள்ளையார் கோயில்கள்

டாக்டர் சு. இராஜசேகரன்,

தமிழ்ப்பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி, சென்னை-600 002.

தமிழ்நாட்டு மக்கள் விநாயகரைப் பிள்ளையார் என்றே அன்புடன் அழைக்கின்றனர். ஆகவே, இங்கு விநாயகர் கோயில்கள் பிள்ளையார் கோயில்கள் என்று குறிக்கப்படுகின்றன.

பிள்ளையார்—ஒரு விளக்கம்:

தமிழ்நாட்டில் 'பிள்ளை' என்ற பெயருடன் செல்லமாய் அழைக்கப் பெறுகிறார். ஆர் விகுதி சேர்ந்து பிள்ளையார் ஆயிற்று. பெரிய இடத்துப் பிள்ளையானதால் அப்பிள்ளையைப் பிள்ளையார் என்றே தமிழ்நாடு வழங்கி வருகிறது' என்று காஞ்சி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் 'பிள்ளையார்' என்னும் சொல்லுக்கு விளக்கம் தருகிறார்.

விநாயகன் என்பதற்கு, .வி-சிறப்பு; நாயகன்-தலைவன்-சிறந்த தலைவன் என்று ஒரு பொருளையும், வி-இல்லை; நாயகன்-தலைவன் தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் என்று மற்றொரு பொருளையும் தவத்திரு திருமுருக கிருபானந்த வாரியார் கூறியுள்ளார்.

விநாயகரைப் பெருமளவில் மக்கள் வழிபடுவதற்குக் காரணம், 'எடுத்த காரியம் எளிதாக-இன்ப மயமாக முடிய வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அந்தஆசையை நிறைவேற்றி வைக்கும் கடவுள் விநாயகரே என்ற நம்பிக்கை ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைத்திருப்பதுதான்' என்று கூறுவர். பிள்ளையாருக்குக் கணபதி. ஏகதந்தர், ஏரம்பர், லம்போதரர், கஜானனர், விநாயகர், விக்னராசர் தூம்கேது முதலான பல பெயர்களுண்டு.

தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாடு:

இராமநாதபுரம் மாவட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் ஒரு குகையில் கண்டெடுக்கப்பட்ட இருகை விநாயகர் சிலையின் மூலம், தமிழ்நாட்டில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே விநாயக வணக்கம் இருந்து வந்திருக்கிறது என்பர். சங்க இலக்கியங்களில் விநாயகரைப் பற்றிய குறிப்பு இல்லை. கி.பி. ஆறாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் கல்லாடத்தில் கணபதி வணக்கச் செய்யுள் உள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தர் தம்முடைய தேவாரப் பதிகங்களில் கணபதியைக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் விநாயக வழிபாடு ஒரு மதமாக மாறியது. கணபதியையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் மதம் 'காணாபத்ய மதம்' எனப்பட்டது. காணாபத்யம் கௌமாரம், வைஷ்ணவம், சௌரம், சாக்தம் சைவம் என்னும் ஆறு வைதீக மதங்களில் கணபதியை வழிபடும் மதம் ஒன்றாகும். சோழர் கற்றளிகளில் பிள்ளையார், பரிவார கணபதியாக, கோபுரத்துக் கணபதியாக, அர்த்த மண்டபக் கணபதியாகக் காட்சியளிக்கிறார்.

இக்காலத்தில் தமிழ்நாட்டில் பிள்ளையார் பட்டி தொட்டிகள் ஆகிய எல்லா ஊர்களிலும் மூலை முடுக்குகளிலும், சாலை சந்திகளிலும் தெருக்குத்து முனைகளிலும், ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், ஆலமரத்தடிகளிலும், அரசமரத்தடிகளிலும், நடைபாதைகளிலும் எழுந்தருளி விளங்குகிறார்.

பிள்ளையார் திருவுருவம்:

திருவடிகள், பெருவயிறு, ஐங்கரங்கள்' கொம்புகள், பெரிய செவிகள், மூன்று கண்கள் பிறைமுடி, பாம்பாகிய அணிகலன், யானை முகம் கொண்டவராகப் பிள்ளையார் காட்சியளிக்கிறார். 'விநாயகப் பெருமான், பிரணவம் ஆகிய ஓங்கார மந்திர சொரூபமாக விளங்குபவர் என்பதனையே அவர்தம் யானை முகத் திருவுருவம் புலப்படுத்தி நிற்கின்றது' என்பர் சான்றோர்.

வழிபாட்டு முறை:

அறுகு, வன்னியிலை முதலியன கொண்டு பிள்ளையாரை வழிபடுவர், மண், பசுஞ்சாணி மஞ்சள், குங்குமம், மாக்கல், சருங்கல், வெள்ளைக்கல், பளிங்கு, .செம்பு, சந்தனம், மரவேர் முதலியவற்றால் பிள்ளையார் உருவம் செய்து வைத்து வழிபடுவது வழக்கமாக உள்ளது. பிள்ளையாருக்குப் படைக்கக் கூடியவை தேங்காய், வெல்லம், எள்ளுருண்டை ,மோதகம் முதலியனவாகும். வெள்ளிக்கிழமை, விநாயகர் சதுர்த்தி, சங்கடஹரசதுர்த்தி முதலிய நாட்கள் பிள்ளையார் வழிபாட்டுக்குச் சிறந்த நாட்களாகும். பிள்ளையாரை எல்லோரும், எப்பொழுதும் எப்படியும் வழிபடலாம்.



மயிலாப்பூர் பிள்ளையார் கோயில்கள்:

மயிலையின் பிரதானக் கோயிலான அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் நர்த்தன விநாயகர் கோயில்கொண்டு திருவருள் பாலிக்கிறார். மயிலாப்பூரிலுளள பிற முக்கியமான பிள்ளையார் கோயில்களின் இருப்பிடம், அவை தோன்றிய காலம், அங்குள்ள மூர்த்தி வழிபாடு நிருவாகம், வருவாய் கோயில் தொடர்பான கதைகள் இலக்கியங்கள் இங்குக் காணலாம்.

ஆயத்துறை அருள்மிகு ஞானசுந்தர விநாயகர் கோயில்:

மயிலாப்பூரிலுள்ள பிள்ளையார் கோயில்களில் இக்கோயில், புகழ்பெற்றதும், பழமையானதுமாகும். செயின்ட்மேரி சாலையும், இராமகிருட்டிண மடத்துச் சாலையும் சந்திக்கும் இடத்தில் இக்கோயில் உள்ளது. முற்காலத்தில் ஆயத்துறை இங்கு இருந்ததாகக் கூறுவர்.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன்னர் இக்கோயில் ஸ்ரீசிவலிங்க சுவாமிகள் என்பவரால் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். இங்குள்ள பிள்ளையார் தெற்கு பார்த்த நிலையில் இருக்கிறார். இவர் வலம்புரி விநாயகராக அமைந்துள்ளார். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் வழிபாடு நடைபெறுகின்றது. விநாயகர் சதுர்த்தி மற்றும் சிறப்பான நாட்களில் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகின்றது. பிரம்மோற்சவம் ஒரு காலத்தில் நடந்துவந்ததாகவும் இப்போது நடைபெறுவதில்லை என்றும் கூறுகிறார்கள். இங்கு வழிபாடு நடத்துபவர் வீரசைவராவார். இக்கோயில் தனியாருக்கு உரிமையானதாகும். பரம்பரை உரிமையாகக் கோயில் நிருவாகம் இருந்து வருகிறது. கோயிலைச் சார்ந்த இடத்திலிருக்கும் கடைகளிலிருந்து வரும் வருவாயினாலும், மக்களிடமிருந்து வரும் நன்கொடையினாலும், வழிபாடு நடத்தப்படுகின்றது. இக்கோயிலில் சனீசுவரருக்கு தனிச் சந்நிதி உள்ளது. நாகாத்தம்மன் வேப்ப மரத்தின்கீழ் வீற்றிருக்கிறாள். முனிசுவரர் சந்நிதி, நால்வர் சந்நிதி ஆகியவையும் உள்ளன. விநாயகர், சுப்பிரமணியர், கைலாசநாதர், நடராசர் ஆகியோரின் உற்சவ விக்கிரகங்கள் தனி அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இப்பிள்ளையார் மீது 'மயிலை ஞான சுந்தர விநாயகர் விருத்தம்' என்னும் பெயரில்

பத்துப் பாடல்கள் பாடப் பெற்ற ஏட்டுச் சுவடி உள்ளது. ஆசிரியர் இன்னாரென்று அதில் குறிக்கப் பெறவில்லை. மரத்திலான தேரும், பிற வாகனங்களும் சிதைந்த நிலையில் இக்கோயிலில் உள்ளன. இங்குள்ள பிள்ளையாரின் மூல விக்கிரகம் இராமகிருட்டின மடத்துச் சாலையில் உள்ள தர்க்காவில் கல்லோடு கல்லாக இருந்ததென்றும், ஆற்காடு நவாபு, கோவளம் தர்க்காவிற்குச் செல்லும் வழியில், அந்தக் கல்லில் குதிரையைக் கட்டினாரென்றும், அப்போது குதிரைக்கு வலி வந்ததென்றும் கூறுவர். அக்கல்லிலிருந்து அவிழ்த்து விட்டவுடன் அதற்கு வலி நின்றது. அக்கல் என்னவென்று புரட்டிப் பார்த்தபோது அது பிள்ளையார் சிலையாக இருந்ததென்றும் அந்தச் சிலையை அடைஞ்சான் முதலி தெருவில் இருக்கும் ஒரு முதலியார் எடுத்துக்கோயில் கட்டினார் என்றும் கூறுவர், பாமர மக்கள் இக்கோயிலை ஆயிரத்தோர் பிள்ளையார் கோயில் என்று வழங்குவர்.

சித்தேரி விநாயகர் கோயில்: இக்கோயில் கேசவப் பெருமாள் சந்நிதித்தெருவில் உள்ளது. முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் இக்கோயில் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். இங்குள்ள பிள்ளையார் மகா கணபதியாவார். இவ்விநாயகரைச் சித்திரை விநாயகர் என்பர், குருக்கள் நாள்தோறும் இருவேளை பூசை செய்கின்றார். துளுவ வெள்ளாள இனத்தைச் சேர்ந்த அறங்காவலர் இதனை நிருவகித்து வருகிறார். கோயிலுக்குச் சொந்தமான கடைகளிலிருந்து வரும் வாடகையே வருவாயாக உள்ளது.

வரசித்தி விநாயகர் கோயில்: இக்கோயில் அப்பு முதலி தெருவில் உள்ளது. சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர் அப்பு முதலியார் என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டது. மூலவர் அமர்ந்த நிலையில் உள்ளார். உற்சவ விக்கிரகம் இல்லை. நாள்தோறும் வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. அப்பு முதலியாரின் பரம்பரையினர் இக்கோயிலை நிருவகித்து வருகின்றனர்.

தெங்கூர் செல்வ விநாயகர் கோயில்: இக்கோயில் தெற்கு மாடவீதியில் வெள்ளீசுவரர் கோயில் உள்ளது. முதலில் இக்கோயில் தெருக்குத்து இடத்தில் தோன்றியது. விநாயகருக்கு நேராக இருக்கும் தெரு, தெங்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு என்றே அழைக்கப்படுகின்றது. இக்கோயில் ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர்ச் செங்குந்த இனத்தவரால் கட்டப்பட்டதாகும். வெள்ளீசுவரர் கோயிலின் தலைவாசலுக்கு நேரே உயரே இருப்பவர் சித்திபுத்தி விநாயகர், அவருக்குச் சிறிது கீழே இருப்பவர் தெங்கூர் செல்வ விநாயகர். நாள்தோறும் நான்கு கால பூசை குருக்களால் செய்யப்படுகின்றது. இச்சந்நிதி இப்போது வெள்ளீசுவரர் கோயிலிலேயே அடங்கியுள்ளது. செங்குந்த இனத்தைச் சேர்ந்த அறங்காவலர் குழுவால் நிருவகிக்கப்படுகின்றது. வீடுகள் நிலங்கள் ஆகியவற்றிலிருந்தும் உண்டியல் மூலமாகவும் வருவாய் வருகின்றது.

செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில்: இக்கோயில் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ளது. நூறு ஆண்டுகட்கு முன்னர் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். இங்கு அமர்ந்த நிலையில் பிள்ளையார் இருக்கிறார். காலை, மாலை இரு வேளைகளிலும் குருக்களால் பூசை நடத்தப்படுகின்றது. விநாயகசதுர்த்திசிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அறங்காவலர் குழுவால் இக்கோயில் நிருவகிக்கப்படுகின்றது. கோயிலுக்குச் சொந்தமான கடைகளில்ருந்தும் உண்டியல் மூலமாகவும் வருவாய் கிடைக்கின்றது. திருமயிலை தமிழ் உபாத்தியாயர் தாண்டவராயச் செட்டியார் என்பவர் ஆசிரிய விருத்தத்தில் பத்துப் பாடல்கள் அடங்கிய 'திருமயிலைச் செங்கழுநீர் விநாயகர் பதிகம்' என்னும் நூலைப் பாடி கி.பி. 1885-இல் வெளியிட்டுள்ளார்.

பரிபூரண விநாயகர் கோயில்: பரிபூரண விநாயகர் கோயில் தெருவில் இக்கோயில் உள்ளது. ஏறக்குறைய 130 ஆண்டுகளுக்கு முன்னர், மதுரைமுத்து முதலியார் என்பவர் இக்கோயிலைக் கட்டினார். மூலவர் அமர்ந்த நிலையில் இருக்கிறார். உற்சவச் சிலை பஞ்சலோகத்தில் இருக்கிறது ஆனால் வீதிவலம் வருவதில்லை. மதுரைமுத்து முதலியாரின் சந்ததியினர் நாள்தோறும் காலையில் மட்டும் வழிபாடு நடத்துகின்றனர். இக்கோயில் வீட்டுக் கோயிலாக உள்ளது. மதுரைமுத்து முதலியார் பரம்பரையில் வந்த திரு கோதண்டராமன் கோயிலை நிருவகித்து வருகிறார். கோயிலுக்குத் தனிப்பட்ட வருவாய் எதுவும் இல்லை. பரம்பரை அறங்காவலரின் சொந்தச் செலவில் வழிபாடு நடத்தப் பெறுகிறது.

பாவடி விநாயகர் கோயில்: இக்கோயில் மாவடி விநாயகர் கோயில் தெருவில் உள்ளது. நூறாண்டுகளுக்கு முன்னர்க் குயவர் இனத்தினரால் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. மூலவர் அமர்ந்த நிலையில் இருக்கிறார். பண்டார இனத்தைச் சேர்ந்தவர் நாள்தோறும் ஒரு வேளை வழிபாடு செய்கிறார். விநாயகர் சதுர்த்தி சிறப்பாக நடைபெறுகிறது. அறங்காவலர் குழுவால் இக்கோயில் நிருவகிக்கப்படுகின்றது. கோயிலுக்குரிய சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வாடகையே வருவாயாகும்.

வினைதீர்த்த கற்பக விநாயகர் கோயில்: இக்கோயில் பிரசன்ன விநாயகர் கோயில் தெருவில் உள்ளது. கி.பி. 1906-ல் முருகேச முதலியார் என்பவர் இதனைக் கட்டினார். 1924-இல் பக்தர்களால் மேற்கொண்டு திருப்பணிகள் செய்யப்பட்டன. மூலவர் அமர்ந்த நிலையில் உள்ளார். நாள்தோறும் குருக்கள் மூலம் ஒரு வேளை வழிபாடு நடத்தப்படுகின்றது. பரம்பரை அறங்காவலரால் இக்கோயில் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது.

ஞானஜோதி நர்த்தன விநாயகர் கோயில்:

முண்டகக்கண்ணியம்மன்கோயில் தெருவில் இப்பிள்ளையார் கோயில் உள்ளது. இன்றைக்குச் சுமார் 56 ஆண்டுகளுக்கு முன்னர்அப்பாதுரை நாயக்கர் என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டது. நடனமாடுகின்ற நிலையில் பிள்ளையார் உருவச் சிலை உள்ளது. பூசாரி ஒருவர் நாள்தோறும் ஒருவேளை பூசை செய்கிறார். விநாயக சதுர்த்தி இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பரம்பரை அறங்காவலரால் இக்கோயில் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது.

வரசித்தி விநாயகர் கோயில்: இக்கோயிலும் முண்டகக் கண்ணியம்மன் கோயில் தெருவில் உள்ளது. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் கட்டப்பட்டது என்கின்றனர். மூலவர் அமர்ந்த நிலையில் இருக்கிறார். குருக்கள் ஒருவர் நாள்தோறும் ஒருவேளை பூசை செய்து வருகிறார். வெள்ளிக்கிழமை தோறும் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி, கார்த்திகை தீபம் ஆகிய விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

பொய்யா வரசித்தி விநாயகர்: செயிண்ட் மேரி சாலையும் மௌபரிசுசாலையும் சந்திக்கும் இடத்தில் இக்கோயில் உள்ளது. ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்னர், பார்த்தசாரதி முதலியார் என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டது. மக்கள் இப்பிள்ளையாரைக் கஞ்சித் தொட்டிப் பிள்ளையார் என்றழைக்கின்றனர். இக்கோயிலைக் கட்டியவர் அக்காலத்தில் இங்கே ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றித் தானம் செய்ததால் கஞ்சித் தொட்டிப்பிள்ளையார் என்ற பெயர் வந்ததாகக் கூறுகின்றனர். இங்குள்ள பிள்ளையார் வடக்குப் பார்த்த நிலையில் இருக்கிறார். இப்பிள்ளையாருக்கு வெள்ளிக் கவசம் உள்ளது. முருகன் மயிலுக்கு பக்கத்தில் நின்ற நிலையில் உள்ள கற்சிலையும் இங்கே வழிபடப்படுகினறது. இச்சிலையைப் 'பாண்டையார் வீட்டினர்' என்பவர்கள் தந்ததாகக் கூறுகின்றனர். நாள்தோறும் காலை ஒரு வேளை மட்டும் பார்த்தசாரதி முதலியார் பரம்பரையில் வந்தவர்கள் பூசை செய்கின்றனர். விநாயகர் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மயிலைக் கபாலீசுவரர் கோயில் அறுபத்து மூவர் விழாவின்போது இப்போதும் இங்கே கஞ்சி ஊற்றுகின்றனர். தனியாருக்குரிய இக்கோயிலைப் பார்த்தசாரதி முதலியார் பரம்பரையில் வந்த திரு. லோகநாதன் என்பவர் நிருவகித்து வருகிறார்

நவசக்தி விநாயகர் கோயில்: இக்கோயில் லஸ் முனையில் உள்ள நடைபாதையில் இருக்கிறது. இக்கோயில் 1967-இல் கட்டப்பட்டதாகும். 22-1-1967 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. மூலவர் அமர்ந்த நிலையில் கிழக்கு நோக்கி இருக்கிறார். குருக்கள் மூலம் நான்கு வேளை பூசை நடைபெறுகின்றது. விநாயகர் சதுர்த்தி, தமிழ்ப் ஆண்டுப் பிறப்பு முதலான சிறப்பு நாட்களில் விழா நடத்தப்படுகின்றது. இங்கு மக்கள் பெருமளவில் கூடி வழிபடுகின்றனர். அறங்காவலர் குழுவால் இக்கோயில் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. பக்தர்கள் காணிக்கையும், உண்டியலில் கிடைக்கும் பொருள்களும் கோயிலுக்குரிய வருவாயாகும்.

•

இவை தவிர பிரசன்ன விநாயகர், சுந்தர விநாயகர், வடக்கூர் செல்வ விநாயகர் சித்தி விக்நேசுவரர் முதலான பல பிள்ளையார் கோயில்கள் திருமயிலையில் இருக்கின்றன.

மனத்தைக் கட்டுப்படுத்துக!

யானை கட்டுப்படாவிட்டால் உலகுக்கு உபத்திரவம்தான். ஆனால் கட்டுப்பட்டுவிட்டால் எத்தனை நல்ல காரியங்களை அதன் மூலம் சாதிக்க முடிகிறது.

ஆஞ்சநேய சுவாமி மனோஜயம் செய்ததால் தான் அவ்வளவு சக்தி பெற்றிருந்து அத்தனை சத் காரியங்களைச் செய்தார். மனதின் சக்தி அபரிதமானது.

"அஹிம்சையை அனுசரித்தேன். மனம் வசப்பட்டது". என்று எத்தனையோ மகான்களும் யோகிகளும் சொல்லியிருக்கிறார்கள்' அஹிம்சையினால் கோபம் போய் மனசானது அன்பில் தெளிந்துவிடுவதால் அப்புறம் அதை வசப்படுத்துவது சுலபமாகி விடுகிறது.

—தவத்திரு சந்திரசேகரேந்திர
சரசுவதி சுவாமிகள்

ஆடல்

காணீரோ...!

கம்பன் கவிநயமணி

வே. தியாகராஜன் (30)

ஒரு சமயம் மதுரையில் சிவபெருமான் மீனாட்சியம்மைக்குத் தனிமையில் வேதத்தின் பொருளை உபதேசித்துக் கொண்டிருந்தார். யாது காரணத்தாலோ அம்மையார் சிறிது கவலையுடன் கவனமின்றி அதனைக் கேட்க, இறைவன் கோபித்து ''மிக மிக முக்கியமான தெய்வீகச் செய்தியைக் கவனமின்றிக் கேட்டதால் நீ ஒரு வலைஞன் வீட்டுப் பெண்ணாகப் பிறப்பாய்' எனச் சபித்தார். வருந்தி நின்ற அம்மையைக் கண்டு மனமிரங்கிய பெருமான் 'நாமும் ஒரு வலைஞனாக வந்து உன்னைத் தக்க சமயத்தில் மணமுடித்துக்கொள்ளுவோம்' எனக் கூறி அனுப்பினார். இது கண்டு ஆத்திரமடைந்த விநாயகப் பெருமான்'' இந்தப் புத்தகங்களால் தானே இவ்வளவு துன்பம்' எனக் கூறி அங்கிருந்த சுவடிகளை எல்லாம்தானே தும்பிக்கையினால் சமுத்திரத்தில் தூக்கி எறிந்தனர். முருகப் பெருமானோ இறைவனது திருக்கையிலிருந்த சிவஞானபோத நூலைப் பிடுங்கி எறிந்தார். சிவ பெருமான் கோபம் கொண்டு நான் தனியாக இருக்கும் செய்தியறியாமல் இக்குழந்தைகள் ஏன் உள்ளே அனுமதித்தாய்? நீ ஒரு சுறா மீனாகப் பிறந்து விடு'' என நந்தி தேவரைச் சபித்து ''முருக! நீ மதுரையில் ஒரு ஊமைப் பிள்ளையாய் பிறப்பாய்'' என்றார். விநாயகப் பெருமான் முழுமுதற் கடவுள். அவரைச் சபித்தால் தன்னைச் சேரும் என்ற காரணத்தால் விநாயகரைச் சபிக்கவில்லையாம்.

'வெருவரு செலவின் வேழமுகத்தனை விதித்த
சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியால் சாபம்
கூறான்
அருவரை நெஞ்சு போழ்ந்த வள்ளைலவடிவேற்
செங்கை
முருகனை வணிகர் தம்மின் மூங்கையாச'
கென்றான் இப்பால்

மதுரைக்குப் பக்கத்திலுள்ள கடற்கரையிலுள்ள ஒரு ஊரில், முற்பிறப்பில் செய்த பாவத்தால் ஒருவன் வலைஞர் குலத்தில்பிறந்து அரசனாக விளங்கினான். மக்கட் பேறில்லாது மனம் வருந்திய அவன் ஒரு நாள் கடற்கரை சென்றான். மகாமேரு செய்த தவத்திற்கு இரங்கிப் பார்வதியாகவும் மலையத்துவசன் செய்த தவத்திற்கு மெச்சித்தடாதகைபிராட்டியாகவும் வந்த அம்மை இன்று புன்னை மர நிழலில், ஒரு வலைஞர் கோனின் தவத்திற்கு இரங்கி குழந்தையுருவாகி அழுது கொண்டே கிடந்தாள். எனதுகுறையை அறிந்துஇறைவன் எனக்கு அளித்த மகவு என மகிழ்ந்த வலைஞர் கோன் எடுத்து வந்து மனைவியிடம் கொடுத்தான். அவளும் குலத்திற்கேற்ற நகைகளை அணிவித்து அக் குழந்தையை வளர்க்கலானாள். அதே சமயம் நந்தி தேவர் சுறாமீன் உருவெடுத்து, விநாயகப் பெருமானால் கடலில் எறியப்பட்ட நூல்களைத் தம் சிரத்தில் தாங்கி இறைவனது திருவடிகளை நினைந்திருந்தார் கடல் நீரைக் கலக்கி அலைகள் மூலம் கரையிலுள்ளகுடிசைகளைஅச்சுறா அழிக்கும். கடலில் மரக்கலம் போகாவண்ணம் கலக்கும். கவிழ்க்கும். வலைஞர் தலைவன் எவ்வளவோ முயன்றும் அச்சுறாமீனைப் பிடிக்க முடியவில்லை. ''இந்தச் சுறாமீனை எவர் பிடிக்கிறாரோ அவருக்கே என் மகளை அளிப்பேன்' எனத் தெரிவித்தான். இறைவன் அம்மை மீனாட்சியைத் திருமணம் செய்து கொள்ள எண்ணி, ஒரு செம்படவனின் வேடம் பூண்டார். முழுதுலகும் ஈன்ற அம்மையை கருணையில்லாதவர் போல் வலைமாதாகும்படி சபித்து. பின்னர் தானே வலைஞனாக வரும்படி நேர்ந்தது. எம் அண்ணலின் செய்கைதான் என்னே!

''முழுதுல கீன்ற சேற்கண் முதல்வியை
அருளிலார் போல்
இழிதொழில் மாதாகச் சபித்தவாறு என்னே!
என்றும்
பழிபடு சாபமேறார் பரதராய் வரவும்
வேண்டிற்று
அழகிது நன்று நன்று எம் ஆலவாயடிகள்
செய்கை.''

சிவகணத் தலைவர்களில் ஒருவர் வலைஞர் வேடம்பூண்டு கூடவே வந்தார். வலைஞர் தலைவன் அவர் எதிரில் தோன்றி 'நீ யார்?'

என்றான். வந்த பெருமான் 'மதுரையில் வலைஞர்கட்கெல்லாம் தலைவனின் மகன் நான் படைத்துக் காத்து அழிக்கவும் வல்லேன். வான்மீன்களை (நட்சத்திரங்களை)க்கூட வலை வீசிப் பிடிக்க வல்லேன்' என்றார். 'இவன் வலைஞனா? அல்லது வேடம் பூண்டவனா? முன்னொன்றும் பின்னொன்றுமாகப் பேசுகிறானே! என எண்ணி' ஐய! இத்துறையில் எவருக்கும் அடங்காது எல்லோருக்கும் துன்பம் செய்யும் ஒரு மீன் உள்ளது; அதைப் பிடித்தால் உனக்கு என் மகளைத் திருமணம் செய்து தருகிறேன் எனறான். இறைவன் தன் கூட வந்தவனுடன் ஓரிடத்தில் ஏறி தனதுவலையை வீச, தனது அன்பனின் வலையில் தான் அகப்படுவது போலவே, இறைவனது வலையில் மீன் அகப்பட்டது. வலைஞர் சாதியே குதுகலித்தது.

''மாசறு கேளிர் அன்பின் வலைப்படும்
வலைஞர் கோன்றான்
வீசிய வலையிற்பட்ட மீனினைச் சுருக்கி
வாங்கிக்
காசெறித் தரங்க முந்நீர் கரையிடையிட்டான்;
கள்வாய்
மூசு தேனென்ன ஆர்த்து மொய்த்தன பரதச்
சாதி''

வலைஞர் கோமான் தன் மகளைச்சுறாமீனைப் பிடிக்க வலைஞனுக்கு தமது குலமரபின்படி திருமணம் செய்து வைத்தான். திடீரென்று வலைஞர் கோமானுக்கு இறைவன் அம்மையுடன் ரிஷப வாகனாரூடராகக்காட்சிதந்தனர். சுறாமீனும் நந்தி தேவராக மாறியது.

வலைஞர் கோமான் முன் பிறவியின் நினைவு வரப்பெற்று உயிர்க்கொலை புரியும் அறிவில்லாத என்னையாட் கொண்ட பெருமானே! எனக்காக வலையன் வடிவம்கொண்டு அம்மையை மணந்து என் பாசம் அறுத்தாயே!' எனத்துதித்தான்,

''இரக்கமில் இழிந்த யாக்கை எடுத்துழல்
ஏழையேனைப்
புரக்க இன்று என் போல் வந்த புண்ணிய
வடிவம் போற்றி!
அரக்கெறி பவளச் செவ்வாய் அணங்கினை
மணந்து என் பாசம்
சுரக்க வெள் விடைமேல் நின்ற கருணையே
போற்றி என்றான்''

இறைவன், ''நீ நெடுநாள் மக்கட் பேறில்லாது வருந்தியமையால் நம் அம்மையை உனக்கு மகளாகத் தந்தோம். பின் முறையாக வந்து மணந்து கொண்டோம். நீ நீடுழி வாழ்ந்து நம் உலகையடைவாயாக'' என்றனர்.

பின்னர் அம்மையை உத்தரகோச மங்கைக்கு அழைத்துச் சென்று வேதப் பொருளை உபதேசித்து மீண்டும் மதுரைக்கு எழுந்தருளினார்.

(தொடர்ந்து வரும்)



(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருவிழாவினை முன்னிட்டு, ரூ. 1.07 இலட்சம் செலவில் திருப்பணி நடைபெற்றுள்ளது.

பட்டுக்கோட்டை, நாடியம்மன் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்காக ரூ. 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தென் திருப்பேரை அருள்மிகு மகரநெடுங்குழைநாதர் திருக்கோயில் திருப்பணிக்காக ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பலநோக்கு பலமாடிக் கட்டடங்கள், அங்காடிகள் மற்றும் திருமண மண்டபங்கள் திருக்கோயில் வருமானங்களில் இருந்தும் கடன் வாங்கியும், கட்டப்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம், திருக்கோயில்களுக்கு நல்ல வருவாயினை ஈட்டித்தர வழி செய்யப்பட்டுள்ளது. சென்னை, இராயப்பேட்டை அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இடத்தில் பலநோக்கு வர்த்தக அங்காடி கட்டுமானப் பணி முதல்கட்டமாக ரூ. 50 இலட்சத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, கட்டுமானப் பணி ரூ.100 இலட்சத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மயிலை, அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் சார்பில் கிரீன்வேஸ் சாலையில், ரூ. 90 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிலும், அழகர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், மதுரை நகரில் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோயில் சார்பில் இரண்டு வணிக வளாகங்கள் ரூ. 55 இலட்சம் மதிப்பிலும், கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன, இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில், 72 அங்காடிகள் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 96 கடைகள் ரூ. 20 இலட்சம் செலவில் கட்ட மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் சார்பில் இரண்டு கல்யாண மண்டபங்கள் ரூ. 48.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வடபழநி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் சார்பாக ரூ. 47.50 இலட்சம் செலவில் 2 திருமண மண்டபங்களும், திண்டுக்கல் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களிலும் ரூ. 16.50 இலட்சம் செலவில் திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருவிடந்தை அருள்மிகு நித்தியகல்யாண சுவாமி திருக்கோயில் சார்பில், ரூ. 6 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடலூர், அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூ. 12 இலட்சம் செலவிலும், உப்பிலியப்பன் கோவில் அருள்மிகு வெங்கடாசலபதி சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ. 6 இலட்சம் செல

விலும் கல்யாண மண்டபங்கள் கட்டப்பட வுள்ளன.

புதுக்கோட்டை சமஸ்தான திருக்கோயில் பராமரிப்பிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த அரசு உதவித்தொகை ரூ. 5.30 இலட்சம் இந்த அரசு பதவி ஏற்றவுடன் ரூ. 9.30 இலட்ச மாக உயர்த்தி ஆணையிடப்பட்டு வழங்கியது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புறங்களில் உள்ள கட்டடங்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்வதற்கு நியாய வாடகைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மண்டைக்காடு, அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் கன்னியாகுமரி மாவட்டம் திருவிழா இட்சக்கணக்கான மக்கள் குழுமி, பொங்கல்வைத்துவழிபடும் திருக்கோயிலாகும். பொதுநல வசதிக்காக திருக்கோயில் மதிற் சுவரை ஒட்டி மூன்று புறமும், பொங்கல் மண்ட பம் ரூ. 2,40,000 செலவில் அமைக்கவும், ஐந்து அறைகள் கொண்ட தங்குமிடம் ரூபாய் 2,20,000 செலவில் கட்டுமானம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் தொடங் கும் நிலையில் உள்ளன.

மேலும் மயிலை, அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில் திருக்குளமும், திருப் பணி செய்யப்பட்டு இவ்வாண்டு தெப்பத் திரு விழாவும் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலின் கருவறை, முகமண்டபம் மற்றும் மகாமண்டபம் ஆகியவைகளைக் கருங் கல் திருப்பணியாகப் புதியதாக உரிய சிற்ப சாத்திர விதிகளின்படி, மாற்றியமைக்க ரூ. 37 இலட்சம் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின ரால் செய்யப்பட்டு வருகின்றது. மேலும், பல திருப்பணிக்காகப் புதிய ராஜகோபுரம் கட்டு தல், புதிய படிக்கட்டுகள் அமைத்தல், போதிய அங்காடிகள், அலுவலகஅறைகள், பக்தர்களுக்கு குடிநீர் வசதி செய்தல், திருமதில் அமைத்தல் மற்றும் உயர்நிலைப் பள்ளி கட்டடம் கட்டுதல் ஆகியவை உள்ளடக்கி ரூ. 6 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள் ளது.

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், சுற்றுப்பிரகார மண்டபம்ரூ. 23 லட்சம்மதிப்பீட்டில்மேற்கொள்ளப்பட்டுநடை பெற்று வருகிறது. மேலும், தங்கும் அறைகள் தண்ணீர் வசதி, குடில்கள், போதிய சாலை வசதிகள், இவைகளை அமைக்கத் திட்டமிடப் பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சென்னைக்கு அருகில் அமைந்துள்ள பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலை, சிற்ப சாத்திர' முறைப்படி திருத்தி அமைக்கவும், நான்கு புறமும், மதிற்சுவர் மற்றும் கோபுரங்கள் கொண் டதும், புதிய மகாமண்டபம், சபாமண்டபம் இவைகளுடன் கூடியதாகவும் அமைக்க ரூ. 70

இலட்சம் மதிப்பில் பெருந்திட்டம் தயாரிக்கப் பட்டு வருகிறது. முதற்கட்ட பணிகள் சுமார் 20 இலட்சத்திற்கு மேற் கொள்ளப்பட்டு தமிழ் நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டு நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு வடபத்ரசய னர் திருக்கோபுரம், தமிழக அரசின் சின்னமாக குறிக்கப்பட்ட பெருமை வாய்ந்த திருக்கோயில் ஆகும். இதன் ராஜகோபுரம் வலுவிழந்து இருந்ததை புதுப்பிக்க வல்லுநர்குழு தெரி வித்த கருத்துக்களின் அடிப்படையில், முதற் கட்டமாக ரூ.49இலட்சம் மதிப்பில் கல்சாரம் மற்றும் இராச கோபுரம் வலுவூட்டும் பணிகள் தமிழ்நாடுகட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது. இரண்டாவது கட்டமாக, கோபுரத் தினைப் புதுப்பித்தும், வண்ணம் அடிக்கவும் உத்தேசமாக ரூ. 45 இலட்சம் அளவிற்குத் தேவைப்படலாம். இரண்டாவது கட்டப் பணிகளுக்கான விலைப்புள்ளிகள் தமிழ் நாடு கட்டுமானக் கழகத்திடம் இருந்து பெறக் பட்டுள்ளது.

மேலும் குறிப்பிடத்தக்க முக்கியத் திருப் பணிகள் நடைபெற்றுள்ள திருக்கோயில்கள் விவரம் பின்வருமாறு.

1. அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை தெற்கு மற்றும் மேற்கு கோபுரத் திருப்பணிகள்.. ரூ. 16 இலட்சம்.

2. அருள்மிகு இராமநாதசுவாமி திருக் காயில், இராமேஸ்வரம்-இரண்டாம் பிரகாரக் கல் திருப்பணி-ரூ. 16 இலட்சம்.

3. அருள்மிகு காமாட்சியம்மன் திருக் கோயில், மாங்காடு, சென்னை-ரூ. 60 இலட்சம்

4. அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம்-இராசகோபுரம்- ரூ. 10 இலட்சம்.

5. அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்-தியான மண்டபம் கட்டுதல்—ரூ. 10 இலட்சம்.

6, அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர்-பிரகார மண்டபம் கட்டுதல்—ரூ. 10 இலட்சம்.

மேற்கண்ட திருப்பணிகள் மட்டுமன்றி, பொதுநல வசதிகளை அளித்து திருக்கோயில் வருவாயினைப் பெருக்குவதற்காகத் திருமண மண்டபங்கள் கட்டுமானம் மேற்கொள்ளப் பட்டு முடிவடைந்துள்ளன.

திருக்கோயில்களின் சார்பில் கல்யாண மண்டபம் கட்டும் பணிகளுக்கு உபரி நிதியுள்ள திருக்கோயில்களின் நிதி உதவி பெற்றோ, அல்லது கடனாகப் பெற்றோ கல்யாண மண்டபங்கள் கட்டப்படும் என்று ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு, 20 இடங்களில் திருமண மண்டபங்கள் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட உள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பின், திருக்கோயில்களில் 1991-இல் நடைபெற்ற குற்றங்களின் எண்ணிக்கை 404 ஆக இருந்தது. இந்த அரசு எடுத்த நடவடிக்கையினால் 1992-இல் 208-ஆகக் குறைந்துள்ளது.

திருக்கோயில்களில் காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பழங்காலத்துஇசைக் கருவிகள் தற்போது வழக்கொழிந்து வருவதைத் தடுக்க வேண்டும் என்றும், இவைகள் மீண்டும் திருக்கோயில்களில் பாதுகாத்துப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்திலும், பஞ்சமுக வாத்தியம், எக்காளம், பாரிநாயனம், உடுக்கை ஜெயகண்டி, பேரி, மத்தளம் மற்றும் யாழ் ஆகிய இசைக் கருவிகளை வாசிக்கும் திறமை வாய்ந்த இசைக் கலைஞர்களை இசைவித்து, அவர்கள் மூலம் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

திருக்கோயில்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிவற்றைப் பயிற்றுவிக்கும் பள்ளி ஒன்று, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நடந்து வருகிறது. இந்தப் பள்ளியில் திருக்கோயில்களில் பயன்படுத்தக் கூடிய இதர இசைக் கருவிகளை-குறிப்பாக, பழங்கால இசைக் கருவிகளை இசைக்கப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பழங்காலத்து இசைக் கருவிகளைத் திருக்கோயில்களில் வாசித்து வந்து தற்போது வயது முதிர்வினால் ஓய்வு பெற்று வறுமையில் வாழும் இசைக்கலைஞர்களில் 100 நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் ஓய்வூதியம் அரசு நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளது.

இரக்கங் கொள்ளுங்கள்

என் குழந்தைகளே ! இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள், அறியாமையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள்.
இதயமே நின்று போகும் வரையிலும் மூளை கொதித்துப்போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள்.

—விவேகானந்தர்

மதுரை, மீனாட்சியம்மன் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் 1962-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட கலைக்கூடம் தற்போது பழுதடைந்துள்ளது. இந்தக் கலைக்கூடத்தினை ரூ. 10 இலட்சம் செலவில் புதுப்பித்துத் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களும், சுற்றுலா பயணிகளும் கண்டுகளிக்கும் வகையில் புதுப்பிக்கப்பட உள்ளது.

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம், பண்ணாரியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் மேற்படி பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் ,பின்தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்பைச்சேர்ந்த பெண்கள் பயன்பெறும் வகையில் பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்று திருக்கோயில் உபரி நிதியிலிருந்து தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒரு சிறப்பு சேமநல நிதித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தினால், பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்களால் செலுத்தப்படும் தொகையுடன் ரூபாய் 500 சேர்த்து வழங்கப்படும் என்ற திட்டம் ஏற்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 8,000 பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

உதவி ஆணையர் மற்றும் அதற்கு மேல் நிலையிலுள்ள செயல் அலுவலர்கள் பணி புரியும் திருக்கோயில்களில் பணி புரிந்து வரும் பணியாளர்கள், 15 ஆண்டுக் காலத்திற்கு மேலாகப் பதவி உயர்வு ஏதுமின்றி, இருந்து வரும் பணியாளர்களுக்குத் தேர்வுநிலை, ஊதியம் வழங்கும் திட்டம்தீட்டப்பட்டுள்ளது. இதனால், ஓராயிரம் திருக்கோயில் பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை மண்வளம், நீர்வளம், ஆகியவற்றை அறிந்து, மா, தென்னை, சவுக்கு, முந்திரி, தேக்கு போன்ற பயன்தரும் மரங்களை வனத்

மயிலை அறுபத்து மூவர் திருவிழாவில் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சி.கே. கரியாலி, இ.ஆ.ப. கலந்து கொண்டார்கள்.

துறை, ஊரக வளர்ச்சித்துறை உதவியைக் கொண்டு பயிர் செய்யவும், அத்தகைய நிலங்களிலிருந்து பெறப்படும் பயன்களைப் பயிர் செய்யும் துறையும் திருக்கோயிலும் சம அளவில் பங்கிட்டுக் கொள்ளவும் திட்டம் செயல் படுத்தப்படவுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறையின் மண்டல மற்றும் கோட்ட அலுவலர்கள் தங்களது சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் தஞ்சாவூர், துணை ஆணையர் அலுவலகம் ரூ. 20 இலட்சத்தில் கட்டப்படவுள்ளது. இந்த நிதியாண்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கிச் செலவிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து புண்ணிய நீராடி வழிபாட்டினை மேற்கொள்ளும் புகழ் பெற்ற இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் அமைந்துள்ள தீவினை அழகு படுத்தவும், வருகை தரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளை ஏற்படுத்தித்தரவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப் படவுள்ளது.

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி குன்றின்மீது அமைந்துள்ளது. இத்திருக்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள மலைப்பகுதி, மலை அடிவாரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை அழகு படுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு அனைத்துவசதிகளை ஏற்படுத்தித்தரவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

திருக்கோயில் சம்பந்தப்பட்ட கலைகளை விளக்கிக் காட்டும் பழம் பொருட்களையும், இந்து சமயத்தினை விளக்கிக் காட்டும் படங்களையும், உலோகத்திருமேனிகளையும், பழங்காலத்து நகைகள், புகைப்படங்கள், வாகனங்கள் ஆகியவைகளின் எழில்களைச் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையிலும் திருக்கோயில் கலைக்கூடம் ஒன்றினை மகாபலிபுரம் சாலையில் ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து முக்கியத் திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக ஒருங்கிணைந்த பயணிகள் தங்கும் விடுதிகள் ஒன்றினைத் திருக்கோயில் அருகாமையிலேயே அமைக்கும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் 30-5-93 வரை 190 திருக்கோயில்களில் குட முழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் மற்றும் கோவை மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களிலும் தங்கரதத் திருப்பணி வேலை செய்யப்பட்டு வருகிறது.

நம்நாட்டுச் சித்தர்கள்

டாக்டர் இரா. மாணிக்கவாசகம்
தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி சென்னை.

9. சித்தர் கருவூரார் தொடர்ச்சி...

'புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவும் கற்றே
அகலுவார் பெண்ணாசை விட்டோ மென்றே
அறிவுகெட்டே ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியும் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெலாம் பெண்ணாசை பூசை
தானே''

எனப் போலிச் சாமியார்களைக் கண்டிக்கும் பாடல் ஒன்று இப்பாடல் திரட்டில் காணப்படுகிறது. குழூஉக் குறியமைந்த பாடல்கள் நிறைந்துள்ளன..

இவர் வாமியாதலால் மதுவூனருந்துபரெனச் சிலபுன்மதி வேதியரிகழ அவர்களுக்கு மதியூட்ட அகாலத்தில் மழை பொழிவித்தும், நதியைப் பெருக்கியும் திருக்கோவிலின் திருக்கதவைத் திறப்பித்தும், பூத்ங்கள் குடைபிடித்து வரச் செய்தும், அற்புதங் காட்டிக்காடு மலை முதலிய இடங்களிலும், பல புண்ய பூமிகளிலும் சிவ தலங்களிலும் சஞ்சரித்து வந்து தாமிரபரணி நதிதீரத்திலே குருகூரென்னும் வைணவ ஆலயத்தை அடைவாநாக திருமால் அதன் முன்னரே அடியவர் கனவில் தோன்றி அவரை உபசரிக்கச் செய்தனர். நெல்லையப்பர் நேரே தரிசனம் கொடுக்கப் பெற்றனர். திருவிடை மருதூரில் சிவபிரானே அழைத்துத் தரிசனம் கொடுக்கப் பெற்றவர். மூன்றீசரை வணங்கி மது வேண்டுமெனக் கேட்டுக் காளி கொண்டு வந்து கொடுக்கப் பெற்று கருமயோகிகளை நோக்கி மீன் கொண்டு வருக என, அவர்கள் கிடைக்க பெறாதது கூற, அருகிருந்த வள்ளி மரத்தை நோக்கி மீன்மாரி சொரிக என்று, அங்ஙனம் சொரிவித்து, அவரர்களை நோக்கி நீங்கள் இவ்வாறு செய்யாது மது அருந்தலென்னையென அவர்கள் முத்தி நெறியை அருள்க எனப் பொதிய மலைக்கு வரக்கட்டளையிட்டுச் சென்று ஒரு விஷ்ணு ஆலயத்தில் நாராயணனை விளித்து வாராமையால் வெகுண்டு; நீ பூசையறுக என்று சபித்துவிட்டு, பொதிகை அடைந்து அகத்தியரைத் தரிசித்து அங்கொருசாரர் இருக்கையில் தஞ்சையில் சோழ ராசன் அமைத்த பெரியதோர் ஆலயத்தில்சிவப்பிரதிட்டை செய்யப்.பலவாறு முயன்றும் மருந்தினதி பந்தனமாகாது வருந்த ஆகாசவாணியால் கருவூர்த் தேவர் வந்தாலன்றிக் காரியஞ் சித்தியாதென உணர்ந்துஅங்கிருந்த போக முனிவர் சீட்டொன்றை எழுதி காக்கையின் காலில் கட்டிவிடுத்துக் கருவூர்த் தேவரை வருவிக்க, தேவர் போகர் முதலியோர் அனுமதி கொண்டு ஆலயத்துட்சென்று சிவ லிங்கப் பெருமானை ஆவுடையாருடன் சேர்த்து நிறுத்தித் தமது வாய்த்தம்பலத்தை உமிழப் பந்தனமாகிப் பசும்பொன் உருக்கியமைத்தது போலிருத்தல் கண்டு யாவரையும் மகிழ்வித்தனர்.

பின்னர் தேவர் திருவானைக்காவைப் பணிந்து திருவரங்கத்தை அடைய அங்கிருந்த பொதுமடந்தை ஒருத்தி தேவர் திவ்விய உருவில் மோகம் கொண்டு பணிந்து தன் கருத்தை உணர்த்த, உடன்பட்டு இரண்டு தினங்கள் அவள் போகத்தை நுகராது நுகர்ந்து திருவரங்க நாதர்பால் ஓர் இரத்தினவடத்தைப் பெற்று அதனை அவட்கு ஈந்து செல்லத் தொடங்குகையில் அவள் பிரிவாற்நாது வருந்த நீ நினைப்புழியெல்லாம் வருவல் என்று கூறிச் சென்றனர். விடிந்தவுடன் அரங்கேசர் சந்நிதியில் காணப் பெறாத இரத்தின வடத்தை அம்மங்கை யணிந்து கொண்டு செல்வது கண்டு இஃதுனக்கு யாரால் கொடுக்கப்பட்டதென வினவ, அவள் ஓர் அந்தணர் தந்தனர் என்றும் இன்றும் வருவரென்றும் கூற, கோயிலாட்கள் சில காவலரை அவள் வீட்டின் புறத்திருத்தி அக்கள்வனைப் பிடித்து வருக எனக் கட்டளையிட்டனர். அன்றிரவு கருவூர்த்தேவர் வர அக் காவலர் அவரைக் கொண்டு போய்த் தேவஸ்தானத்தார் முன்னிட, இவ்விரத்தின மாலையை ''நீரோஇவட்குத் தந்தவர்? உமக்கு இஃது எவ்வாறு கிடைத்தது?' என, திருவரங்கத்தீசரே எனக்குக் கொடுப்ப யானிவட்குக் கொடுத்தேனென, இஃதுண்மையாயின் அவ்வரங்கநாதன் இவ்வவையில் கூறல் அவசியமென தேவர் திருமாலை வேண்டத்திருமால் ஆகாயத்தில் தோன்றி அசரீரியாகத் தாமே தந்தோம் எனக் கூறக்கேட்டு அவர்கள் அவரடியிற் பணிந்து மன்னிக்க வேண்டினர். அங்ஙனமே மன்னித்தார்.

தேவருடைய இனத்தவராகிய சில வேதியர் அரசன்பால் சென்று எமது குல ஒழுக்கம் மாறிய கருவூர்த் தேவரைக் கண்டிக்க வேண்டும் என, அரசன் கருவூராருடைய ஆசிரமத்தை அடைந்து 'ஒவ்வோரிடத்தையும் பரிசோதித்து வைதீக கருமங்கட்குரிய பல பொருள்களும் மலிந்து கிடக்கக் கண்டு தேவரை வணங்கித் தன்னை மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ள தேவர், அவ்வந்தணர்கள் இருக்கைகளையும் நீ கண்டு வருக என, அரசன் சென்று கண்டவிடமெல்லாம் மதுவும், புலாலும் மச்சமுமாயிருக்கக் கண்டு அவர்களை நகர்கடத்தி ஓட்டிவிட்டனன். தேவர் அதனையுணர்ந்து அரசனே எவ்வகையினரையும் பொதுவாக நோக்குதலே உனக்குத் தருமமெனக் கூறினர். அவ்வந்தணர் தம்பிரா நதிக்கரையில் திரண்டு தேவருக்குத் தீங்கிழைக்கக் காத்திருக்கையில் கருவூர்த் தேவர் அங்கடைந்து திரு ஆநிலைக் கோயிலுட் செல்ல அவர்களும் பின் செல்ல, கதியடைய வேண்டிய காலம் நேர்ந்தமையின் தேவர் பசுபதீச்சுரரைத் தழுவிக் கொள்ள சிவ

பெருமான் தம்முன்னே இரண்டறக் கலந்து கொள்ள அருளப் பெற்றனர். அது கண்ட அந்தணர் அவரது மெய்யன்புக்கு வியந்தும் தமது அபசாரத்திற்குப் பயந்தும் நிற்ப உங்கள் குற்றங்கள மன்னிக்கப்பட்டன என ஆகாய வாணி கூறக் கேட்டு மகிழ்ந்து சென்றனர். இக் குறிப்புகள் பெயர்ச் சொல் அகராதியில் காணப் படுகின்றன.

10. காகபுசுண்டர்

புசுண்டர் என்ற பெயரிலும் இவர் குறிக்க பெறுவார். சித்தர் ஞானக் கோவையில் இவர் இயற்றியனவாக, காகபுசுண்டர் ஞானம 79 பாடல், காகபுசுண்டர் உபநிடதம் 31 பாடல், காகபுசுண்டர் காவியம் 33 பாடல், காக புசுண்டர் குறள் 16 பாடல் ஆக சுமார் 159 பாடல்கள் காணப்பெறுகின்றன. இவைகளில் காணப்பெறும் ஒழுங்கின்மையை ஆராயின் பல பாடல்கள் புதியனவாக இடைச் செறுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். பல அழிந்திருத்தல் வேண்டும் ன்னும் உண்மை புலீனாகும்.

மது உண்டு அன்னங்கள் இரண்டு களிக் கும்போது சிவமூர்த்தி அவற்றைப் பார்க்க அந்த அன்னங்களிடம் சிவகலைீ காகஉருவத் துடன் பதிந்தது. அன்னம் 20 முட்டைகளைப் பொரித்து 21-வது காகத்தைப் பொரித்தது. இதுவே புசுண்டர் எனப் பெயருற்றது. இப் புகண்டர் வசிட்டரைக் கண்டு தன் வரலாறும் சதுர் யுகத்தில் தான் கண்ட அதிசயங்களையும் தன் ஆயுவில் பலமுறை தேவர்கடல் கடைந்த தும், விஷ்ணுமூர்த்தி பலமுறை அவதரித்ததும் கூறி உம்மைப்போல் எட்டு வசிட்டர்களைக் கண்டேன் எனவும் கூறி காக உருவாக விளங் கியவர் என்னும் குறிப்பு அபிதான சிந்தாமணி யில் காணப் பெறுகின்றது. இக்குறிப்பின் மூலம் யாதென விளங்கவில்லை.

ஒரு யுகாந்தத்தில் சிவ சந்நிதியிலிருந்த யானை, மாடு, ஒட்டகம், கரடி முதலியவற் றின் முகங்களையுடைய பல்வகைப்பட்ட எண்ணிறந்த சிவகணங்களுக்கிடையே சத்தி கணங்களில் சிலர் நடித்தனர். அங்கிருந்த அணிமாதி அஷ்டைசுவரியங்களையுமுடைய சயை, விசயை, சயந்தி, அபராசிதை, சித்தை, இரத்தை, அலம்புதை, உற்பலை எனப்படும் அட்ட சத்திகளும் சிவாக்கினைப் பெற்று உற் சவங்கொண்டாடி மதுபானிகளாய் நடித்தமை யின் அச்சத்திகளுடைய வாகனங்களும் மது மயக்குற்றுக் களிகதிருந்தன. அப்பொழுது பிரம சத்தியின் வாகனங்களாகிய பெண் அன்னங்கள் சண்டனென்னும் வாயசத்தைக் கூடிமகிழ் மிக்குக் கருப்பமாயின. விழாவொழிந்து ஆடல் பாடல்கள் நிறுத்தப் பெற்ற பிறகு சத்திகள் முதலினோர் தத்தம் பரிசேர்க்கையில் பல அன்னங்கள் தாம் கருவுற்றமையை உணர்த்த, பிரம்மசத்தி நீங்களினி என்னைத் தாங்கும் வலியில்லராகலின் நும் விருப்பப்படியே செல்கென விடுத்து நிர்விகற்ப சமாதி யிலிருந்தனள். அன்னங்கள் கர்ப்ப முதிர்ச்சி யால் மானத சரசின் கரையில் வசித்திருந்து கால நியதியில் முட்டையிட்டன. அவற்றி னின்று புஜண்டர் முதலிய இருபத்தொருவர் பிறந்தனர். புஜண்டர் முதலிய இருபத்தொரு வரும் தாய்மார்களுடன் பிராமியைக் கருதிப் பெருந்தவம் லசய்ய, பிராமி சமாதி நீங்கி யருள ஞானம் பெற்று அவ்விருபத்தொருவரும் தம்பிதாவாகிய சண்டனை வினவ இச்சண்டன் அலம்புதைஅருள் பெற்ற இக்கற்பக விருட்சத் திலே இருக்க என அப்படியே அங்கு அனேக யுகங்கள் வசித்த பின்னர் புஜண்டர் நீங்கிய மற்ற இளைஞர் இருபது பேரும் தேக மழிவ தென அதனை யொழித்து முத்தியெய்தினர். புஜண்டர் அதனைக் காத்து கற்பக நிழலில் வசித்திருக்கையில் வசிஷ்டர் தன் எட்டாம் பிறப்பில் அங்குற்று அவருடன் சம்பாஷித்த னர் என ஞானவாசிஷ்டத்தான் உணரப்படும் என்னும் குறிப்பும் காணப் பெறுகின்றது.

இக்குறிப்புகளில் எவ்வளவு உண்மையின் கலப்பு உள்ளதென்பது நாமறியோம் என்றா லும் இவர் காகம் போல் பார்க்கும் பார்வை யைப் பெற்றிருந்தார் என்பது மட்டும் உறுதி யாகத் தெரிகின்றது.

''காணாத காட்சியெல்லாம் கண்ணிற் கண்டு
காகமடா புகண்டரென்று பேரும் பெற்றேன்
—19 ஞானம்

''கேளப்பா இப்படியே பிரளயந்தான்
கிருபையுடன் ஏழுலட்சம் கோடி யானால்
ஆளப்பா அரியயனும் சீவ செந்தும்
அகண்டஎன்ற பிரமத்தி லடங்குவார்கள்
நாளப்பா நானுமந்தப் படியே செல்வேன்
நலமாக இன்னமுந்தான் அகண்ட மானால்
வாளப்பா காகமென்ற ரூப மானேன்
வடவரையின் கூடுதொத்தி யிருந்தேன்
பாரே 48

'பாரடா இப்படியே யுகங்கள் தோறும்
பார்தனில்நா னிருந்தேன்எத் தனையோ
கோடி
ஆரடா எனைப்போலே அறிவா ருண்டோ
ஆதியென்ற சித்தருக்கும் ஆதி யானேன்
வீரடா விமலரிடம் செல்லும் போது
வெற்றியுடன் யெடுத்தெனை முத்தமிட்டார்
காரடாகைலையின் மேலிருக்கச் சொன்னார்
காகமென்ற ரூபமா யிருந்தேன் பாரே' 49

காகமென்ற ரூபமா யிருந்து கொண்டு
காரணங்கள் அத்தனையும் கருவாய்ப்
பார்த்து
வேகமுடன் வெளியோட்ட நிலையாய்ப்பார்க்க
வெகுதூரம் சுற்றியின்னம் விவரங் காணேன்
மோகமுடன் பரந்தமனம் அணுவ தாக்கி
மூர்க்கமுடன் பரவெளியை மனவெளி தாக்க
நாகரிக மாகவுந்தா னண்ட மேவி
நடுவணைய முச்சிநடு மத்தி தானே' 50

(தொடரும்)

கடனின்றி வாழ....

'யோகிராஜ்' வேதாத்திரி மகரிஷிகள்,

உலக சமுதாய சேவா சங்கம், திருவான்மியூர், சென்னை-14.

(1) உணவு, உடை, உறைவிடம் ஆகிய பொருட்களும் பிறவசதிகளும் இல்லாமல் வாழ முடியாது. இவை உழைப்பால் அன்றிக் கிடைக்காது. பொருள் வளம் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காக எல்லோருமே உழைப்பைப் பயன்படுத்திப் பொருட்களை உற்பத்தி செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்; உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இது உடல் வலிவும் அறிவு நுட்பமும் பெற்ற எல்லோருடைய கடமையும் ஆகும்.

(2) ஒவ்வொருவரும் குழந்தையாக இருந்த காலம் உண்டு. இடையில் மரணம் சம்பவிக்காமலிருந்தால் முதுமையடையப் போவதும் நிச்சயம். குழந்தைப் பருவம், வயோதிகம், நோய்வாய்ப்பட்டிருக்கும்நாட்கள் இக்காலங்களில் பொருள் ஈட்ட முடியாது. பிறர் ஈட்டிய பொருட்கள் மூலம்தான் வாழ வேண்டும். ஆகவே ஒவ்லவாருவரும் அதற்குப் பதிலாகத் தம் குழந்தைகளையும், பெற்றோர்களையும் நோயாளிகளையும், தான் உழைத்து பெறும் பொருட்களால் உதவிக் காத்து வர வேண்டும். இவை பொருள் துறையில் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய தவிர்க்க முடியாத கடமைகளாகும்.

(3) உடலில் எழும் இயற்கைத் துன்பங்களான பசி, வெப்பதட்ப போன்ற உணர்ச்சி, கழிவுப் பொருட்களின் உந்து வேகம், இவற்றை காலாகாலத்தில் தீர்த்துக் கொள்வதற்கே பொருட்கள் வேண்டும். துன்பங்களை நீக்கி விட்டால் எஞ்சி இருப்பது இன்பந்தானே! துன்பத்தை தீர்த்துக் கொள்வதற்கே பொருள் தேடி உழைக்கலாம்; பெற்று அனுபவித்து இன்பம் காக்கலாம். இன்பத்திற்காகப்பொருள் தேடுவதும் அனுபவிப்பதும் வலியிலும், நோயிலும் முடியும்.

(4) பொருள் வரவிற்கும் செலவிற்கும் ஒத்துப்பார்க்கும்போது வரவு மிகுதியாக இருக்க வேண்டும். வரவுக்கு மீறிய செலவும் செலவுக்குக் குறைந்த வருவாயும் உள்ள தனி மனிதன், தனது குடும்பம், ஊர், நாடுஇவற்றை ஒட்டி கடமைகளை நிறைவேற்ற முடியாமையால் மற்றவர்கள் மதிப்பை இழந்து மற்றவர்க்கு வாழ்க்கைப் பாரமாகித் துன்பத்தை அடைந்து அவமானமும் படநேரும். பொருள் ஈட்டுதலைக் காலத்தில் கற்று, செம்மையாக உழைத்துப் பொருளீட்டல், மனித வாழ்வின் அடிப்படை அறமாகும்.

(5) ஈட்டும் பொருள்களில் அதிகமாக மிகுந்திருந்தால் அதை முறைப்படி பிறர்க்கு உதவுவது மனிதன் கடமை, குறைந்தபட்சம் தனது வருமானத்தில் 100-இல் ஒரு பங்கு ஒதுக்கித் தன்னலமற்ற ஈகையாக்கிப் பிறர்க்கு உதவுவது சமுதாயத்தில் அறம் வளர அன்பு ஓங்க ஏற்ற நற்செயலாகும்.

(6) கடன் என்பது தவிர்க்க முடியாத காலத்தில் தான் வாங்கலாம். எளிதாகக் கிடைக்கும் காரணத்தாலும், பழக்கத்தாலும் கடன் வாங்குவது வாழ்வில் எதிர்பாராத ஏமாற்றத்தை உண்டு பண்ணும். ஒருவர் சொத்தின் மதிப்பில் 10-ல் ஒரு பங்குக்கு மேல் அதிகமாகக் கடன் போகாமல் பார்த்துக் கொள்வது பாதுகாப்பான செயல். கடன் என்பது மனதுக்கு ஒரு மாய விலங்கு; தானே தனது வாழ்வின் நலத்தை அடிமையாக்கும், எதிர்கால வாழ்வை அடகு வைக்கும் செயல். அறிவிற்கு அது ஒரு பெருங்களங்கம். கடனுடைய மனிதன் புண்ணுடைய உடல் போன்றவன. கடன் என்ற புண்ணில் வட்டியென்ற சீழ்பிடிக்கும். அதை அவ்வப்போது அகற்றா விட்டால் புரையோடும். வேதனை தாங்க முடியாது. கடன் இல்லாத வாழ்வை அனுபவிக்க முயலுங்கள்.

தவத்திரு யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் இன்று வையம் போற்றும் பெரும் மகான்களில் ஒருவராகத் திகழ்ந்து வருகிறார்கள். பொருள் பற்றிய அவருடைய சிந்தனை மிக உயர்வானது. அனைவரும் படித்துப் பயன் கொள்ள வேண்டுகிறோம்.

திருஞான சம்பந்தர் அருளிய
மழை பொழிவிக்கும் வள்ளல்
பதிகங்களை வெளியிட்டு
வான்மழை பொழிய வைத்த
தங்கள் திருத்தொண்டிற்கு
எங்கள் மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்,

—ரா. நா. தியாகராஜன் குடும்பத்தினர்.
வில்லிவாக்கம்.

மழை பொழிவிக்கும் வள்ளல் பதிகங்கள்

(7) பொருளாசை வேண்டாம் என்று ஞானிகள் பலர் கூறியுள்ளார்கள். பிறர் நலம் கெடுக்கும் அளவிற்குப் பொருட்கள் மீது பேராசை வேண்டாம் என்ற குறிப்பே அது. கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருள் ஈட்டுவதை அந்தப் போதனை கட்டுப்படுத்தாது. பொருள் இன்றி வாழ முடியாது. ஒருவன் பொருளீட்டும் கடமையிலிருந்து விலகினால் அவன் கடமையைச் சேர்த்து மற்றவன் செய்துதான் ஆகவேண்டும். அது பிறர்க்கு பாரமே. ஆகவே ஞானியாக இருந்தாலும் முறையாக அறவழியில் பொருளீட்ட வேண்டும் என்று நான் கூறுகிறேன். ஒரு மனிதன் அறிவில் உயர்ந்திருந்தால், அதன் பயனைத் துய்க்க மக்களும் உணர்ந்து விரும்பினால், அவனுக்குப் பொருள் உதவிபுரிந்துஅவன் ஆற்றலைச்சிறந்த முறையில் பயன் கொள்ளக் கூட்டு முறையில் வழி செய்து கொள்ளட்டும். அது வரையில் ஞானியானாலும் அவன் வாழ்க்கைத் தேவைக்கும் அவன் ஆற்றியுள்ள கடமைக்கும் பிறர் உழைப்பையோ தயவையோ எதிர்பார்க்கக் கூடாது.

(8) பொருள் ஈட்டுதலில் எடுக்கும் முயற்சி அதைக் காத்தலினும்எடுக்கவேண்டும். மிகுதியான பொருட்களைக் கவர்ந்திடப் பல விதமான தொடர்பு கொண்டு பொருளுடையோரைப் பலர் வட்டமிடுவார்கள். கொடுக்கும் வரையிலும் புகழ்ந்து பேசிப் பிறகு தூற்றுவார்கள். பொருட்களுக்காகவே நட்பு பாராட்டும் நடிகர்கள் உலகில் நிரம்ப இருக்கின்றார்க்ள். அவர்களிடம் தப்புவது அனுபவமிக்கோருக்கே முடியும். காப்பதில் திறமையில்லாத பொருளீட்டல் தாழ்ப்பாள் இல்லாத கதவு போலாகும்.

(9) பொருள்பற்று ஒழித்து விடுவது தெய்வீக வாழ்வு என்பது அறிஞர்கள் கண்ட தெளிவு. தனி மனிதனுக்கல்ல இப்போதனை. அது சமுதாய முறையில் நடைபெற வேண்டிய பொதுமை முறைத்திட்டம். 'எனது பொருள்' என்பதற்குப் பதிலாக 'நமது பொருள்' என்று கூறிக் கொள்ளுமாறு பொதுமைப் பொருளியல் முறை உருவானால் மக்களிடம் அன்பு ஓங்கும். உடல் இருக்கும் வரையில் பொருட்களும் வேண்டுமல்லவா! தனி மனிதனோ ஒரு குழுவினரோ பொருள்பற்றை விட்டுவிட முடியாது. தன்னையோ கடவுளையோ அறிந்த பேரறிஞருக்கும் ஏற்படும் பசியை உணவுதான் தீர்த்து வைக்க முடியும். உணவை முறையாக உழைத்துப் பெறுவது நல்லதா பிச்சை எடுத்து உண்பது நல்லதா? சிந்தனையை உயர்த்தி முடிவு கூறுங்கள். பொருள் துறையில் உள்ள பொறுப்பை ஒருவன் விட்டுவிட்டால் அது வேறு ஒருவர் தலையில்தான் பாரமாக ஏறும். நயவஞ்சகத்தாலோ சோம்பேறித்தனத்தாலோ அப்படிச் லசய்வது பாவம்.

(10) பொருட்களின் மதிப்பு உணராதவன் வாழத் தகுதியற்றவன். பிறர் பொருள் மீது ஆசை வைப்பவன் கயவன். பொருட்களிலிருந்தே உடல் வளர்கின்றது. காக்கப்படுகின்றது. உடல் இருக்கும் வரையில் பொருட்களும் வேண்டும். ஏமாந்தவர்களது பொருட்களைச் சுரண்ட சன்யாசி வேடங்கொண்டு 'பொருளாசையை விடுங்கள். ஆண்டவன் அருள் பெறலாம்' என்று கூறுவோர்களிடம் சிக்க வேண்டாம். அவர்கள் சுயநலத்திற்கு, அவர்கள் பொருள் துறையில் உயர்வதற்கு, உங்கள் வாழ்வின் நலனையே பலி கொண்டு விடுவார்கள். இத்துறையில் எச்சரிக்கையோடு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர்தி. அமிர்தலிங்கம், M. A., Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



தெய்வச் சேக்கிழார் விழாவில் பேராசிரியர் டாக்டர் தி. இராசகோபாலன் அவர்கள் நடுவராக விளங்க ''பெரிய புராணத்தில் பெரிதும் போற்றப்படுவது ஆண்டவன் பெருமையா? அடியவர் பெருமையா?'' எனும் தலைப்பில் பட்டிமன்றம் சிறப்புற நிகழ்ந்தது. மிகத்திரளான பக்தர்கள் இப்பட்டிமன்ற நிகழ்ச்சியைக் கண்டு பயன் அடைந்தார்கள்.



குன்றத்தூரில் சிறப்புற நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் கலந்து கொண்டு தொண்டை மண்டல ஆதீனம் கயிலை புனிதர் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை அருளினார்கள். வேலூர் துணை ஆணையாளர் திருமிகு வே. சொரி முத்து, பி.ஏ.பி.எல்., மற்றும் காஞ்சிபுரம் உதவியாணையாளர் திருமிகு ரா. தியாகராஜன், மற்றும் நிர்வாக அதிகாரி என். கே. கே. இராமசாமி ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தனர்.